A/L 89
PHYSICS
வினா - விடை
ஒளியியல்
Tue, Thu — 2-15
மின்னோட்டத்தினால்
ஏற்படும் விளைவுகள்
Tue, Thu — 3-15
ஆரம்பம் 13-6-89
ஆசிரியர்:
R. சத்தியசீலன்
21, மணல்தரை லேன்,
கந்தர்மடம், (யாழ்)



Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ2/50

PHYSICS
A/L - 90
Mon, Wed, Fri
3-15 பொறியியல்
4-15 ஒளியியல்
A/L 91
Sat & Sun — 3-00
வேணியர் அளவிடை
ஆசிரியர்:
R. சத்தியசீலன்
21, மணல்தரை லேன்,
கந்தர்மடம். (யாழ்)

சுடர்: 4 சுக்கில ஆண்டு வைகாசி மீ 31 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ்தா பிறை 8 (13 - 06 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 160

★ ஜூலை 29 ஆம் திகதிக்கு முன்னர்

# அமைதிப்படை வாபஸ்

# இந்தியா நிராகரித்தது!

## வெளியுறவு அமைச்சு அதிகாரி தகவல்

புதுடில்லி, ஜூன் 13

வருகிற ஜூலை 29 ஆம் திகதிக்கு முன்னர் இந்திய அமைதிப் படையை விலக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஜனாதிபதி பிரேமதாஸாவின் கோரிக்கையை இந்தியா நேற்று சம்பிரதாயபூர்வமாக நிராகரித்து விட்டது.

இதனை புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:

★ வடக்கு-கிழக்குமாகாண சபைக்கு அதிகாரங்கள் சரியாக வழங்கப்படவேண்டும். நம்பகத்தன்மையும் பலன் தரக்கூடியதுமான சட்டம்-ஒழுங்கு நடைமுறை வ-கி மாகாணசபைக்கு வழங்கப்படவேண்டும்.

★ வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு என்று தனியான பொலீஸ் படை நிறுவப்படவேண்டும்.

அத்துடன் அமைதிப்படை விலகல் பற்றி இருதரப்பினரும் பேசி, கலந்தாலோசித்தே முடிவு செய்யப்படவேண்டும். கலந்துபேசி அமைதிப்படை வாபஸ் வாங்கும் பணியை இந்தியா ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது.

அமைதிப் படை விலகலும் அதிகாரப் பரவலாக்கலும் ஒரே சமயத்தில் நடைபெற வேண்டும்.

கட்டம் கட்டமாகவே கலந்தாலோசனையின் பேரிலேயே அமைதிப்படை விலகல் இடம் பெறவேண்டும்— என்று கூறினார். (அ-எ)

### சுபநேரம்

13—06—1989
வைகாசி—31
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10.22 முதல் 11.52 வரை
ராகுகாலம்:
02.52 முதல் 04.22 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு: 3 பேர் பலி!

கொழும்பு, ஜூன் 13

குருநாகல் மாவட்டத்தில் கட்டுப்போக்க என்னும் இடத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலீஸ் நிலையம் ஒன்றைத் தாக்கினர்.

இதன் காரணமாக நிலைமையைக் கட்டுப்படுத்த பொலீஸார் பாதுகாப்புப் படையினரை அழைத்தனர்.

படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

சுமார் 3ஆயிரம் பேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்திய அமைதிப் படையினரை வெளியேற வேண்டும் என்று கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. [ஓ-உ-எ]

### இந்தியப் படங்களுக்கு இன்று முதல் தடை

கொழும்பு, ஜூன் 13

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் படங்கள் எதுவும் திரையிடப்படக்கூடாது என்று தென் பகுதியில் உள்ள தியேட்டர் உரிமையாளர்கள் தீவிரவாத இயக்கம் ஒன்றினால் கோரப்பட்டுள்ளனர்.

இந்தியப் படங்கள் திரை

(6ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



வேலை நிறுத்தம், பாடசாலை மூடல், ஹர்த்தால் எல்லாம் வந்தால் ஒரேயடியாகத்தான் வருமோ......!

### பாஷையூர் அந்தோனியார் திருவிழா இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 13

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய 139 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

இன்று காலை 7.00 மணிக்கு பங்குத் தந்தை அருட்திரு. ஜே. ஏ. பிரான்சீஸ் அடிகளினால் திருநாள் கூட்டுத் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

மாலை 4.30 மணிக்கு, புனிதரின் தேர்த்திருப் பவனியும், இறுதி வழிபாட்டு நிகழ்ச்சியாக யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையால் கூட்டுத் திருப்பலிப் பூசையும், நற்கருணை ஆராதனையும், கோடி அற்புதரின் ஆசீர்வாதமும் வழங்கப்படும். (ஓ)

(சிறப்பிதழ் 3 ஆம் பக்கத்தில்)

### புதுடில்லியில் குண்டுவெடித்து 6 பேர் பலி

புதுடில்லி ரயில் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 6 பேர் கொல்லப்பட்டனர்; 44 பேர் காயமடைந்தனர்.

சீக்கியத் தீவிரவாதிகளின் செயலாக இது இருக்கலாம் என்று சொல்லப்பட்டது.

## பாடசாலைகள் அனைத்தும் இவ்வாரம் முழுவதும் மூடப்படும்

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

சகல அரச பாடசாலைகளும் வருகிற 19ஆம் திகதியே மீண்டும் திறக்கப்படும்' இந்தவாரம் முழுவதும் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும்-

இதனைக் கல்வி அமைச்சு அறிவித்திருக்கிறது.

கல்வித் துணை அமைச்சுச் செயலாளர் கேர்னல் குடலிகம இத் தகவலை நேற்று வெளியிட்டார்.

பாடசாலைகளுக்கு மாணவர்கள் சமுகமளிப்பதில் உள்ள கஷ்டங்கள் பற்றி கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கேர்னல் குடலிகம மேலும் சொன்னார்.

கடந்த ஞாயிறு கூட்டங்களை நடத்தி இது பற்றி முடிவுகளை எடுத்து அறிவித்தமைக்காக அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவருக்கும் கேர்னல் குடலிகம நன்றி தெரிவித்தார். [அ-எ]

## தெற்கு நிலைமைகளுக்காக வட-கிழக்கில் பாடசாலைகளை மூடுவதா? -- முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூன் 13

தெற்கில் நிலவும் நிலைமைகளுக்காக வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளை அரசாங்கம் மூடிவைக்க முனைவது கண்டிக்கத்தக்கது. மத்திய அரசு இவ்வாறு கண்மூடித்தனமாக நடப்பதன் மூலம் எமது பிரதேச மாணவர்களின் கல்வியையும் நலன்களையும் குழிபறிக்க முயற்சிக்கிறது. கடந்த காலங்களில் நடைபெற்ற வன்செயல்களினால் எமது பிரதேசத்தில் பாடசாலைகள் இயங்காதபோது தெற்குப் பாடசாலைகள் இயங்கின: ஆனால் இன்று எமது பிரதேசப் பாடசாலைகள் இயங்கக்கூடிய சூழல் இருந்தும் தெற்கிலுள்ள நிலைமைகளுக்காக மூடப்படுவது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத நடவடிக்கையாகும்.

வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் மேற்கண்டவாறு கண்டனம் தெரிவித்தார்:

அதிகாரப் பரவலாக்கலின் கீழ் எமது பிரதேச கல்வி நிர்வாகம் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின்

(6ஆம் பக்கம் பார்க்க)

### ராணுவ வீரர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜூன் 13

குருநாகலில் உள்ள கல்நாவ என்ற இடத்தில் ராணுவ வீரர் ஒருவர் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதே சமயம் கந்தளாயில் ஐ. தே. க. அமைப்பாளர் ஒருவரும் சுடப்பட்டு மரணமானார். (இ-உ)

### குண்டுச் சத்தமும் வேட்டுக்களும்

காங்கேசன்துறை, ஜூன் 13

மாவிட்டபுரத்தை அடுத்த கொல்லன் கலட்டிப் பகுதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் பலத்த குண்டுச் சத்தமும், அதைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன.

இதற்கிடையில் நேற்று முன்தினம் மாவிட்டபுரம் முகாம் ''சென்றி''க்கு அருகில் காணப்பட்ட குண்டு ஒன்றை படையினர் கண்டுபிடித்து மாலை வெடிக்கவைத்தனர்.

இப்பகுதியில் சோதனைகள் அதிகரித்துள்ளன. (ஓ-68)

## பாடசாலைகள் நேற்று இங்கும் இயங்கவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்றுப் பாடசாலைகள் இயங்கவில்லை. மாணவர் வரவு பெரும் அளவில் வீழ்ச்சி கண்டிருந்தது.

பல பாடசாலைகளில் காலையில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் மாணவர்கள் வந்திருந்தபோதிலும்ஒன்பது பத்து மணியளவில் அவர்களும் வீடுகளுக்குச் சென்றுவிட்டனர்;

பாடசாலைகள் மாணவர் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்ட போதிலும் ஆசிரியர்களும் அதிபர்களும் நண்பகல் வரை இருந்துவிட்டு அதன் பின்னரே வீடு சென்றதைக் காண முடிந்தது.

மாணவர் பாதுகாப்பை உறுதி செய்யும் விதத்தில் அதிபர்கள் நிர்வாகிகள் உத்தரவாதம் அளிக்கக்கோரி நேற்று முதல் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்க, பல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் முயற்சி மேற் கொண்டிருந்தது தெரிந்ததே.

#### மட்டக்களப்பில்

இதே சமயம் மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளில் நேற்று மாணவர் வரவில் நாற்பது சதவீத வீழ்ச்சி காணப்பட்டதாக எமது மட்டக்களப்புச் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அமைதிப்படை வெளியேற்றத்துக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் பெரும் அளவில் கலந்து கொண்டதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. [அ-இ 10-9-21]

## தெற்கில் இந்தியருக்கு பாதுகாப்பு; இலங்கை அரசின் பொறுப்பாகும்

### இந்தியா இப்படிச் சொல்கிறது

புதுடில்லி, ஜூன் 13

தென்னிலங்கையில் வாழும் இந்தியப் பிரசைகள், இந்திய அதிகாரிகள் ஆகியோருக்கு வேண்டிய பாதுகாப்பு அளிப்பது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இது குறித்து நாம் அந்நாட்டு அரசிடம் வற்புறுத்திக் கூறியுள்ளோம். அத்தோடு இது விஷயமாகக் கொழும்புடன் அடிக்கடி தொடர்பு கொண்டு வருகிறோம்.

இவ்வாறு இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜே. வி. பி. இயக்கத்தின் உத்தேச இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளினால் ஏற்படக்கூடிய நிலைமைகள், விளைவுகள் குறித்துச் செய்தியாளர்கள் கேட்டபோதே, அவர் முன்கண்டவாறு கூறினார்.

ஜே. வி. பி. இயக்கத்தினர் பெரும் அளவிலான இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக அறிவித்திருப்பதும் -

அதன் ஆரம்ப கட்டமாக நாளை புதன்கிழமை முதல் தென்னிலங்கையில் ஹர்த்தால் அனுஷ்டிக்க அழைப்பு விடுத்திருப்பதும் தெரிந்ததே.

ஜே. வி. பி யின் இந்தப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## இந்தியப் படை இப்போதாவது போர் நிறுத்தம் செய்ய வேண்டும்

### ஈ. ஜ. முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 13

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையே இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தை நடைபெறப் போகும் இக்கட்டத்திலாவது இந்தியப் படையினர் போர் நிறுத்தம் ஒன்றை அறிவிக்க வேண்டும்.

ஈழவர் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. வே. பாலகுமாரன்வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு கோரியுள்ளார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;-

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் தமிழ்பேசும் மக்களுக்கு பூரண பாதுகாப்பு அளிக்கப்படும் என்ற அடிப்படையில் ஆயுதங்களைக் கையளித்த எம்மீது ஏவிவிடப்பட்ட படுகொலைகள் ஒப்பந்தத்துக்கு முன்னால் உள்ள சூழ்நிலைக்கு செல்வதற்கே எம்மை உந்தித் தள்ளுகின்றன.

எனவேதான் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறப் போகும் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையின் போதாவது இந்தியப் படையினர் ஆயுதக்களைவை நிறுத்தவேண்டும்.

நிரந்தரப் போர்நிறுத்தம் ஒன்றை அறிவித்து அமைதியைப் பேணுவவே தற்போதைய சூழ்நிலையில் முற்றிலும்

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்பில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

மட்டக்களப்பு, ஜூன் 13

இந்திய அமைதிப் படை வெளியேறுவதை எதிர்த்து மட்டக்களப்பில் நேற்று பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

கருவாஞ்சிக்குடியிலிருந்து ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஒந்தாச்சிமடத்தில் உள்ள இந்திய அமைதிப்படை முகாம் வரை நடத்தப்பட்டது.

ஊர்வல முடிவில் முகாம் பொறுப்பதிகாரி ராம்சிங்கிடம் மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

மகஜரைப் பெற்றுக் கொண்ட பொறுப்பதிகாரி அங்கு பேசுகையில் தாம் வந்த பணி அரைவாசியே முடிவடைந்திருப்பதாகவும் முழுதும் நிறைவேறிய பின்னரே அமைதிப்படை வெளியேறும் என்றும் தெரிவித்தார்.

★ இந்தியப் பாதுகாப்புத் தேவை.

★ ஸ்ரீலங்கா இராணுவம் வேண்டாம்.

★ முதலமைச்சரே தமிழ் ஈழத்தைப் பிரகடனம் செய்யுங்கள்.

இவைபோன்ற சுலோகங்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு - யாழ். 'இன்ரசிற்றி' ரயில்சேவை அடுத்தமாதம் முதல்?

யாழ்ப்பாணம், ஜூன் 13

கொழும்பு – யாழ்ப்பாணம் ''இன்ரசிற்றி'' கடுகதி ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து ரயில்வேத் திணைக்களம் ஆலோசித்து வருவதாக அறியப்படுகிறது.

இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து யாழ். ரயில் நிலையத்தில் இருந்தும் ஆலோசனை பெறப்பட்டுள்ளது.

தற்பொழுது யாழ்தேவி சேவை நடைபெற்று வரும் சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் ''இன்ரசிற்றி'' சேவையை மேலதிகமாக நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை காலை 5.30 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படும் ரயில் நண்பகல் யாழ்ப்பாணத்தை அடைந்து -

பின்னர் அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படவும் - ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களில் மட்டுமே அமைதிப்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் இருப்பதால் ஏனைய நாட்களில் இச் சேவையை நடத்த முடியாது எனவும் ரயில்வேத் திணைக்கள வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது.

அடுத்த மாத நடுப்பகுதியில் இச் சேவை ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-10)

## அனுராதபுரம் இ.போ.ச. ஊழியர் வேலைநிறுத்தம்

### கொழும்பிலும் பஸ் சேவை பாதிப்பு

கொழும்பு, ஜூன் 13

கொழும்பு, அனுராதபுரம் மற்றும் மாவட்டங்களைச் சேர்ந்த போக்குவரத்துச் சபைகளின் சில சாலைகளின் ஊழியர்கள் நேற்று வேலை நிறுத்தம் செய்தனர். இதனால் பஸ் சேவைகள் பெரிதும் பாதிப்புற்றன.

வடமத்திய பிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

அனுராதபுரத்தில் உள்ளூர், வெளியூர் சேவைகள் நடைபெறவில்லை. அனுராதபுரம்–வவுனியா பஸ் சேவையும் நேற்றுத் தடைப்பட்டது.

இந்த வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறும் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் மூலம் தெரியவருகிறது.

இதேவேளை நேற்று அனுராதபுரம் ஊடாக போக்குவரத்தில் ஈடுபட்ட தனியார் பஸ்களுக்கு மிரட்டல் விடுக்கப்பட்டதாக அங்கிருந்து

[6 ஆம் பக்கம் பார்க்க]

### கிழக்கிலும் பஸ்கள் ஓடவில்லை

மட்டக்களப்பு, ஜூன் 13

தென்பகுதியில் நேற்று இடம்பெற்ற பஸ் வேலைநிறுத்தம் இழக்கு மாகாணத்தையும் பாதித்தது.

நேற்று மட்டக்களப்புப் பகுதியில் அரச பஸ்கள் ஓடாததால் உள்ளூர், தூரசேவைகள் எதுவும்இடம்பெறவில்லை யாழ் — மட்டக்களப்பு பஸ் சேவையும் நடைபெறவில்லை. (இ-21)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Yamaha Electric 125 Moter Cycle விற்பனைக்கு உண்டு. 14 ஆம் 15 ஆம் திகதிகளில் பார்வையிடலாம். 12/2, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம் (758)

இறக்குமதி செய்த இருக்கும் [Holland Ornk] விதை உருளைக்கிழங்குதேவைப்படுவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 259, காங்கேசன் துறை வீதி. யாழ்ப்பாணம் [753]

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்கு உண்டு Country of Origin Holland பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [756]

### தேவை

மோட்டார் றீவைண்டிங் எயர்கொண்டிஷன் வேலைபழக விரும்புபவர்கள் பயிற்சி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழும் பயிற்சிக் காலத்தில் சம்பளமும் வழங்கப்படும். நேரில் வரவும். "ஒமேகா" மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம் (763)

பிரபலமான வியாபார ஸ்தாபனம் ஒன்றுக்கு விற்பனையாளர்களாக கடமையாற்றுவதற்கு முன் அனுபவம் வாய்ந்த பெண்பிள்ளைகளும் ஆண்களும் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். பாலாஜி ரேட் சென்டர் [வெலிங்டன் சந்திக்கு அருகில்] 61, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [11227]

### மணமகள் தேவை

யாழ் வேளாள றோமன் கத்தோலிக்க இலங்கையில் B Sc. பட்டம்பெற்ற U. K யில் எக்கவுண்டனாகப் பணிபுரியும் மணமகனுக்கு அழகுள்ள படித்த மணமகள் தேவை. தொடர்பு 'A B C D E' 328 நாவலர் றோட், ஆனைப்பந்தி. (762)

### அடிக்கல் நாட்டுவிழா

பூநகரி ஆலங்கேணி சாது சிவானந்த சுவாமிகளது சமாதிக்கு 14- 6- 89 புதன்கிழமை பகல் 1.30 மணியளவில் உ. அ. அதிபரால் சமாதி அடிக்கல் நாட்டி வைக்கப்படும் நன்றி. விழாக்குழுவினர். (11237)

### தவறிவிட்டது

கதிர்காமு சின்னத்துரை ஆயிலி காரைநகர் அடையாளஅட்டை தவறிவிட்டது. கிடைத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்திலோ அன்றி ஏசியன் றெக்ஸ்ரையில் பலாலிறோட், திருநெல்வேலியிலோ ஒப்படைக்கவும். [761]

### Spoken Eng'ish

புதியபிரிவு ஆரம்பம் 15- 6- 89 செவ்வாய், வியாழன் நாட்களில். நேரம் பிற்பகல் 3 30 - 5.00 S.B Iyar. 12, வைமன் வீதி நல்லூர். [11224]

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்; Fudo Enterprises. 39/17 மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2833]

## பரீட்சைக்கு தோற்றும் மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 13

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் ஜி சி. ஈ. [உயர்தரப்] பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகள் தேசிய அடையாள கார்ட் அல்லது தபால் திணைக்கள அடையாளக் கார்ட் அல்லது கடவுச்சீட்டு ஆகியவற்றுடன் மட்டும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று யாழ் பிரதிக்கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரிய தம்பி அறிவித்துள்ளார். [இ-3]

# பத்து லட்சம் வீட்டுத் திட்டத்தில் கிராம சபைகளுக்கும் கடன்

யாழ்ப்பாணம் ஜூன் 13

அரசின் பத்துலட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் மாநகரசபை, நகரசபைகள் தவிர கிராம சபைகளுக்கும் 5,000 ரூபா கடன்வழங்கப்படவுள்ளது.

இக்கடன் பெறத் தகுதி உடையவர்களைத் தெரிவு செய்யும்படி கிராமசேவை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இக்கடன்கள் அவ்வப்பகுதியில் இயங்கும் ஐக்கியநாணய சங்கங்களின் ஊடாகவே வழங்கப்படவுள்ளன.

ஐக்கியநாணயச் சங்கங்கள் இல்லாத பிரதேசங்களில் சனசமூக நிலையம் கிராம அபிவிருத்திச்சங்கம் ஆகியவற்றின் அங்கத்தவர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டு கிராமசேவையாளர்களைச் செயலாளராகக் கொண்ட ஒரு நிர்வாக குழுவின் சிபார்சின்படியே கடன் வழங்கப்படும்.

இக்கடனைப் பெறுவதற்கு தகுதி உடையவராகக் கருதப்படுபவர்கள் தமது பெயரிற் காணி உள்ளவராகவும், வேறு வீடு அற்றவர்களாகவும் இருக்கவேண்டும்.

மேற்படிகடன் வீடு திருத்துதல், கிணறு அமைத்தல், மலசலகூடம் அமைத்தல்போன்ற தேவைகளுக்காக வழங்கப்படும். (க-13)

## காணி விற்பனைக்கு

உரும்பராய்ச் சந்தியில் இருந்து அரைமைல் தூரத்தில், உரும்பராய் கிழக்கு கோப்பாய் வீதியில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. சுற்று மதில் கட்டப்பட்டது. வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உதவும்.

கிழமை நாட்களில் காலை 8. 00 மணி முதல்மாலை 5. 00 மணி வரை சந்திக்கலாம்.

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

M. Balasubramaniam,
Chinese Park View Lodge
No 70, Park Street,
Colombo - 2,
Tel: Colombo 26255

(11241)

## வீடு, வளவுகள் விற்பனைக்கு

1. சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் வீதியில் தொழிற்சாலை நடத்திய காணி பரப்பு 10 குளி 12 சுற்றுமதில் கட்டிடம், குழாய்க்கிணறு, 1300 கன்று சமச்செய்கைத் தறையுடன்.
2. சூராவத்தை அம்மன் கோயிலுக்குக்கிட்ட பரப்பு 7
3. சூராவத்தையில் பரப்பு 3 வீட்டுடன்.
4. புதிய ஒற்றைக் கரத்தை வண்டில்.

தொடர்பு கொள்க:

**R. E. யோசேப்**
**குமாரசுவாமிப் புலவர் வீதி,**
**சுன்னாகம்**

(சுன்னாகம் புகையிரத நிலைய பாதையில் இருந்து 200 யாருக்குள் நீர்ப்பாசனக் கிணற்றுக்கு அருகில்) [915]

## APPOLLO



* யாழ் குடாநாட்டில் தயாரிக்கப்படும் தரம் மிக்க, சுவையான கேக்.
* ஒவ்வொரு வாரமும் புதிய தயாரிப்பு விற்பனைக்கு விடப்படுகிறது
* இது ஓர் உன்னத வீட்டுத் தயாரிப்பு.

**சாவகச்சேரி நேயர்களுக்கு**

உங்கள் வீட்டில் விசேஷ வைபவங்களுக்கு எம்மை நாடுங்கள்

- Butter Cake 1 Kilo — Rs. 60.00
- Fruit Cake 1 Kilo — Rs. 70 00
- Iced Cake [Cream]—1 Ki'o Rs. 90.00
- Birihday Cake 1 Kilo Rs. 110.00
- Chocolate Cake, Chocolate Cream 1 Kilo Rs. 100.00
- எம்மிடம் கேக் Bake பண்ணிக் கொடுக்கும் வசதியும் உண்டு,

காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை எமது Gas Ovenஇல் உங்கள் கேக் Bake பண்ணிக் கொடுக்கப்படும். இதற்காக Tray ஒன்றுக்கு ரூபா 5.00 மட்டுமே அறவிடப்படும். கூடிய அளவு Orderகளுக்கு விசேஷ சலுகை.

**ஸ்ரேஷன் லேன், சாவகச்சேரி.**

(11240)

## C. I. M. A
### Stage III - Nov 89

| | |
|---|---|
| ADVANCED FINACIAL ACCOUNTING | Mr. R. N. Varendiran & Mr. S. Thilakakumar |
| COMPANY LAW | Mr. K. Mahendran |
| MANAGEMENT ACCOUNTING TECHNIQUES | Mr. K. Nanthakumaran |
| TAXATION | Mr. R. N. Vraendiran |

**Classes Just Commenced**

For Further details

**North Ceylon Technical Institute**
14, St. peter's lane
Hospital Road, Jaffna.

## யோகாசனப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 13

சாந்தி யோகா நிலையம் அகில இலங்கை ரீதியான யோகாசனப் போட்டி ஒன்றை நடத்தவிருக்கின்றது.

இதில் 10 வயது தொடக்கம் 60 வயது வரைக்குமுள்ள ஆண் பெண் இருபாலாரும் கலந்து கொள்ள முடியும்.

இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் விண்ணப்பப் பத்திரங்களை 6. 7. 89 வரைக்கும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்திலும்திவ்ய ஜீவன சங்கத்திலும் பெற்றுக் கொள்ளலாம். இந்த விண்ணப்பங்களை 5. 7. 89 இற்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என அறியப்படுகின்றது. (க)

## நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

மண்டைதீவு மாகாவித்தியாலய அதிபராகவும், மண்டைதீவு கொத்தணி அதிபராகவும் கடமையாற்றிய திரு. த. துரைசிங்கம் இம் மாதம் முதல் யாழ்ப்பாணம் கோட்டக் கல்வி அலுவலகத்தில் கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். [க]

# நல்வழி காட்டும் நன்னூல்கள் இன்று அருகி வருகின்றன

### இந்துநாகரிகத்துறைத் தலைவர் கவலை

யாழ்ப்பாணம், ஜூன் 13

"இளம்சிறுர்களுக்கு நல்வழிகாட்டும் நூல்களை எழுதும் பாரம்பரியம் இன்று அருகிவருகிறது. இது இளம் சிறுர்கள் நல்வழியில் செல்வதற்குத் தடையாக இருக்கிறது"

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி நா. கோபாலகிருஷ்ணன் நல்லை ஆதீனத்தில் நடந்த 'வாழ்வின் வெற்றிகையில்' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

கலாநிதி வெ. திருஞானசம்பந்தர், திருமதி தி. மனோன்மணி ஆகியோரின் மேற்பார்வையில் அவரது பிள்ளைகளான திருக்குமரன், திருச்குமரிகை ஆகியோர் எழுதிய இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு நல்லை ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகள் தலைமை வகித்தார்.

கலாநிதி கோபாலகிருஷ்ணன் மேலும் பேசுகையில் கூறியதாவது;

இளம்சிறுர்களை நல்வழிப்படுத்த நாவலர் பல நல்நூல்களை வெளியிட்டார். அதே போல் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்ற நல்நூல்களும் கிடைத்தன. இன்று இந்த நல்வழிகாட்டும் நூல்கள் வெளிவருவதில்லை. இந்நிலையில் இந்த நூல் வெளியிடுவது சாலச் சிறந்த பணியாகும்.

எம் சமய நூல்கள் சமூக நலனை அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றன. சமய நூல்கள் எம் பண்பாட்டை வெளிக்கொணர நல்ல உதவியாக அமைகின்றன. ஆகவே எம் சமுதாய நலன்களைப் பாதுகாக்க எம் சமய நூல்கள் காட்டிய வழியில் நாம் செல்ல வேண்டும்.

இப்படி அவர் கூறினர்.

சிவதர்ம வள்ளல் க. கனகராசா பேசுகையில் 'நல்வாழ்வுக்கு வழி காட்டும் இந் நூலை சகலரும் படித்து அதன்படி நடந்து வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும்.' என்ருர்.

நல்லை ஆதீன கர்த்தர் ஆசியுரை வழங்கினர். கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் நன்றியுரை கூறினர். [இ-3]

## இளைப்பாறினர்

பச்சிலைப்பள்ளி, ஜூன் 13

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பிரதம எழுதுநராகவும் நிதி உதவியாளராகவும் கடமையாற்றிய ஜே. லேமன் அண்மையில் தமது சேவையிலிருந்து இளைப்பாறினர்.

இவர் சுகாதார சேவைகள் அமைச்சிலும் இலங்கை மின்சார சபை தலைமையலுவலகத்திலும் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. [ச-117]

## PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES
### 59, St. PATRICK'S ROAD, JAFFNA.

The theory examination for Computer Programming students of 7th to 13th Batches will be held on 18. 6. 89 at 9 a. m. - Venue: St. Patrick's College. Hall.

Students of 7th to 13 th Batches are kindly requested to obtain their Index number at the Office between 9 a. m. and 4 p. m. on any working day.

(C/2839) REGISTRAR.

## நன்றி நவிலல்

### திரு. சரவணமுத்து அரியகுட்டி

[ கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ]

வட்டுக்கோட்டை மூளாய் வீதியில் வசித்த திரு. சரவணமுத்து அரியகுட்டி 07-06-89. அன்று காலமாகிவிட்டார். இவர் அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சரவணமுத்துவினதும் நாகம்மாவினதும் அன்பு மகனும் புவனேஸ்வரி, கமலேஸ்வரியினது அன்புச் சகோதரனும், புஷ்பராணியின் அன்புக் கணவரும், சுபேசன், தபேசன், ரமேசன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

தாய், சகோதரர், மனைவி, மக்கள்.

மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை. (918)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்

### கிருஷ்ணசாமி இராமச்சந்திரன் (கில்மன்)

மண்ணில்: 07- 12- 1965 மனதில்: 14- 05- 1989

வீட்டுக்கு ஒளிதந்த விஞ்சுபுகழ் ஒளிவிளக்கே!
நாட்டுக்கு உழைத்திட்ட நாயகனே! - உன்
உயிர் கொடுத்தாய் உத்தமனே வேட்டுருவாய் வந்த
எமன் பயிர்தன்னை அழித்தனனே - ஐயோ!

குறிப்பு;- 13- 6- 89செவ்வாய்க்கிழமை நடைபெறும் வீட்டுக்கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேம்.

தந்தை, தாய், சகோதரர்கள், மீசாலை வாழ்மக்கள்.

மீசாலை தெற்கு,
மீசாலை,
13- 06- 1989 (சி/2840)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### சூசைப்பிள்ளை கிறிஸ்தோப்பர்

மலர்வு: 21 05- 1916 மறைவு: 14- 05- 1989

ஒருமாத காலம் ஓடி மறைந்தாலும்
பாராது உன்முகம் நாம்
தவித்தாலும் எந்நாளும்
உம்மை மறவோம் ஐயா!
எப்பொழுதும் உமக்காய்
வேண்டுவோம் ஐயா!

இவரின் ஆன்ம சாந்திக்காக சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் 13- 6- 89 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்குபற்றி, இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றுடுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேம்.

இவர் பிரிவால் துயருறும்;

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர், உற்றூர், உறவினர்கள்,

சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு. (919)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய 139 ஆவது வருட நிறைவு மலர்

## கோடி அற்புதர் என்று ஒரு தரம் சொன்னால் ஓடி மறைந்திடும் துன்பமெல்லாம்

ஒரு பங்கில் நடு நாயகமாக விளங்குவது கோவில். கோவிலில்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்' 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' போன்ற முதுரைகள் எம்மக்கள் மத்தியில் விளங்கும் ஓர் அடிப்படைக் கருத்தை வலியுறுத்துகின்றன. தன்னியல்பிலேயே மனிதன் கடவுள் பற்றும் பிடிப்பும் உடையவன். ஆகவே தான் நீக்கமற நிறைந்திருக்கும் சத்ரூபமான சாட்சுஷாத் கடவுளுக்குப் பிரத்தியேகமான ஓரிடத்தை பிரதிஷ்டை பண்ணி அங்கே இறைவன் உறைந்திருக்கிறார் என்ற அன்பு உணர்வால் உந்தப்பட்டு, புனித அந்தோனியார் வழியாக இறைவனை வழிபட ஏற்ற ஓர் ஆலயத்தை நிறுவி, திருவழிபாட்டு விழா எடுத்து வந்தனர் எம் முன்னோர்.

### பதுவைப் புனிதர் பாஷையூரில்

யாழ் குடாநாட்டின் தென் பகுதியில் நெய்தல் நிலப்பகுதியில் அழகே உருவாக கெம்பீரமாக தலை நிமிர்ந்து நிற்கும் ஓர் ஆலயம் உண்டென்றால் அதுதான் பாஷையூராம் எம்பதியிலே அருள் மழை பொழிய எழுந்தருளியிருக்கும் புனித அந்தோனியார் ஆலயமாகும். இவ்வாலயம் இப்பங்கு மக்களின் விசுவாசத்தைப் பிரதிபலிப்பது மாத்திரமல்ல ஒரு சமுதாயத்தின் ஆன்மீக ஒழுக்க உயர்வை எடுத்துக் காட்டும் அளவுகோலாகவும் அமைகிறது.

கடலைக் கண்ணேக்கிப்பிழைக்கும் எம்மவர் தொழில்வளம் பெருகச் செய்கிறார் புனிதர். அந்தோனி எனும் நாமம் தங்களுக்கு தஞ்சம் என்பதை உணர்ந்தவர் போலும் எம் ஊர் மக்கள். குடும்பத்தில் வாழையடி வாழையாக இப் புனிதர் பெயரால் பிள்ளைகளை அழைக்க மறப்பதில்லை.

### ஆலய வழிபாட்டில் பக்த கோடிகள்

பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் புனிதரை வழிபட பக்தர் குழாம் மடைதிறந்த வெள்ளம் போல வருவது இப்புனிதருக்கும் அவர் எழுந்தருளியிருக்கும் இப்பங்குக்கும் பெரும் சிறப்பையளிக்கிறது.

புனிதர் போதிக்கும் தாழ்ச்சி பொறுமை, கற்பு, மனக்கட்டுப்பாடுடனை சீவியம், திடகாரிக்கமான கிறிஸ்துவ மன உறுதி எனும் புண்ணிய நெறிகளில் அவரின் உதவியை இறைமகன் யேசுவின் அருளுடன் கேட்டு நிற்கிறார்கள்.

புனித அந்தோனியார் உயிர் கிறிஸ்துவுக்கும் உடல் மண்ணுக்கும் என்று சீவித்தமையால் 'வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாக போற்றப்படுகிறார்' தேவதாயும் வளர்ப்புத் தந்தை சூசையும் யேசுவைக் கையிலேந்தும் பாக்கியம் பெற்றவர்கள்.

ஆனால் இப் புனிதரின் கைகளிலே பாலகன் யேசு தேடி வந்து உறைந்தார். யேசு பிரான் தம்மை மகிமைப்படுத்த இப் புனிதரை தெரிந்தெடுத்தது மிகப் பொருத்தமானதென்பது வெள்ளிடைமலை. லிலி மலருடன் யேசுவுடனும் காட்சியளிக்கும் இம் மனித குல மாணிக்கத்தின் புகழ் உலகுள்ளவரையும் கோடான கோடி

(5 ஆம் பக்கம் பார்க்க)

உதவிப் பங்குத் தந்தை
அருட்திரு. எம். பி ஞானரெட்ணம்

---

பாஷையூர் பங்குத்தந்தை

## அருட்திரு ஜே. ஏ. பிரான்சிஸ் அடிகளார் ஆசியுரை

பழம்பெருமை புகழ் வாய்ந்த பாஷையம்பதியில் புனித அந்தோனியார் பெயரால் கட்டப்பட்ட கோவில் 139ஆவது வருட நிறைவு விழாவைக் கொண்டாடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

பேரும் புகழும் பேச்சால் வருவதல்ல; மாறாக நடைபெறும் நல்ல விளைவுகளால் வருவதாகும்'' 139 ஆண்டுகள், நம் இறைவன் நமது புனிதர் வழியாக நம் மக்கள் நடுவில் பொழிந்த அருள்மழை பிரளயமாகப் பெருகச்செய்து மக்கள் வாழ்வை வளம்பெறச் செய்திருக்கிறார். இன்னல்கள், துன்பங்கள், வேதனைகள் மத்தியிலே எம்புனிதர் கோடி அற்புதங்கள் செய்து நம் தமிழ் மக்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கிறார்.

சமய வேறுபாடின்றி நமது புனிதரின் வல்லமை மிக்க ஆதரவை நாடிய மக்களுக்கெல்லாம் துயர் துடைத்து வியத்தகு முறையில் தமது ஆசியை வழங்கியிருக்கிறார்.

அவருடைய அருளைப் பெறுவதற்கு மென்மேலும் நம்மைப் பக்குவப்படுத்துதல் வேண்டும் என்று கேட்டு எம்புனிதரின் ஆசீர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்திறங்க ஆசிக்கின்றேன்.

அருட்திரு ஜே. ஏ. பிரான்சிஸ் அ. ம. தி.


---

## நீலக் கடல் ஓரத்தில் கோலவிழா!

தாகங்கொள் மேகமது வேக மாக
தொட்டுரசிப் பணிந்தேற்ற வளர்ந்த கோயில்
ஆகங்கொள் அழல்வினையின் அருமருந் தானய்
ஆனி பதின்மூன்றும்நாள் அழகுத் தேரில்
தூபங்கொண் டிகபரந்தோர் துதிகள் பாட
தெள்ளுதமிழ் துள்ளுமிசை தென்றல் தூவ
வேதங் கொண்டாடு சந்தந்தோனி யாரின்
வாரியனை பாஷைநகர் விழாக் காண்போமே!

ஆசிரியர் தங்கவர்ணம் ஏபிரகாம்

---



புனிதரின் வண்ணப் பொற்தேர்.

கோடி அற்புதர் தேரில் பவனி வரத்தாம் கண்டு பரவசம் அடைய வேண்டுமென ஆசை கொண்டனர். எனவே 100ஆவது ஆண்டு நினைவு விழா தொடக்கம் வண்ணப் பொற் தேரிலே அவர் ஊர்வலமாக வர புதிய தேர் 1950 ஆம் ஆண்டில் அமைத்தனர். அவர் தேரிலே பவனி வரும் அழகையும் அவர் கொலுவிருக்கும் கோலாகலத்தையும் கோடி புதுமைகளை ஒரு நாளில் அள்ளி வழங்கத் தயாராயிருக்கும் அந்தத் திவ்விய முகத்தையும் காண ஆயிரம் கண்கள் போதா. கோடானு கோடி பக்தர்கள் புடை சூழ அவர் வரும்போது காற்றிலே எழும் ''அந்தோனி எனும் நாமம் அடியோர்க்குத் தஞ்சம்'' ''வணக்கம் வணக்கம் கோடி அற்புதரே'' என்ற பாக்கள் மக்கள் மனதை பக்திப் பரவசத்தில் மூழ்கச் செய்யும்.

---

## எமது பங்கிலிருந்து தேவ அழைத்தலுக்கு

''அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு'' (மத் 9: 37)

கிறிஸ்தவ விசுவாசம் என்னும் விலையுயர்ந்த மாணிக்கத்தை பல ஆண்டுகளுக்கு முன்பே பெற்றவர்கள்பாஷையூர் மக்களாகிய எம்மவர். ஒரு பங்கிலுள்ள மக்களின் விசுவாசத்தின் அளவுகோல் அப்பங்கிலிருந்து உருவாகும் குருக்கள் கன்னியர்களின் எண்ணிக்கையில்தான் கண்டுகொள்ள முடியும்.

அவ்வகையில் எமது பங்கிலிருந்து அருட்தந்தையர்கள் லோ. வ. இராயப்பு அ.ம.தி, பிலிப் அ. ம. தி, கேபேட் நேரியோ ஏபிரகாம், அருட்சகோதரன் ஞா: பெனடிக்ற் CA, சின்னப்பு செல்வதாஸ், சங். சகோதரிகள் தியோப்பான் அருளானந்தம், லொறிண்டா ஞானப்பிரகாசம், கெலன்றீசா ஞானப்பிரகாசம், யூபேமியாயோ ண் பிள்ளை, பவுலா அந்தோனி,

இன்னும் மாணவ மாணவிகள் தேவஅழைத்தலுக்காக தயார் செய்து கொண்டு வருகிறார்கள் இவற்றுக்கெல்லாம் காரணம் எம். புனிதரின் வழி நடத்தலே.

---

மலர் ஏற்பாடு

பாஷையூர் வர்த்தகர்கள் சார்பில்

விஜி, றெபேட், பென்சன்.


---

## ஆலய வளர்ச்சியும் பங்குத் தந்தையரும்

1844இல்'' ஒறற்ரோறியன், சபையைச் சேர்ந்த அருட்திரு. யுவக்கீன் அடிகளால்இவ்வாலயம் நிறுவப்பட்டது.

பின் மக்களின் புத்தூக்கமும் கொழுந்து விட்டெரியும்வாஞ்சையின் உந்தலும் கவினுறு கல்லக்கோவிலாக திகழ அருட்திரு. டெலான்டெஸ் 1911ம் ஆண்டளவில் ஆலய வேலையை பூர்த்தி செய்தார். 1926இல் சந்தியாகோ அடிகள் ஆண்டவரின் ஆலயத்தின் அழகைக் கருத்திற் கொண்டு அதன் முகப்பிற்கான அடிக்கல் நட்டாளுர். 1928இல் மீண்டும் பங்குத்தந்தையாக அமர்ந்த டெலானடெஸ் அடிகள் காலத்தில் புனித அந்தோனியார் திருச்சுரூபம் நடு நாயகமாக மேற்படி மூலஸ்தானத்திலேயே வைக்கப்பட்டது. அருட்திரு. ஜே. நீக்கலாஸ் அடிகள் காலத்தில் நூற்றுண்டு விழா கொண்டாடப்பட்டது.

பேரன்பும் பெரும் மதிப்புடனும் விளங்கும் தற்போதைய பங்குத்தந்தை அருட்திரு. பிரான்சீஸ் அடிகளார் எமது மறை பங்கின் வளர்ச்சிக்கு ஆற்றும் பணி அளப்பெரியது. இன்றைய ஆலய பொலிவிற்கும் இவரே மூல காரணமாவார். இவரது சேவை பல்லாண்டு காலம் தொடர புனிதர் அருள் புரிவாராக



பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் ... தோற்றம்.

---




புனித அந்தோனியாரின் திருச்சுரூபம்.

கோடிகேயிற் அற்புதனே கோலமுற ஒட்டுவித்தீர்!
மீன் பலத்த ... மிஞ்சுவுரை உரைத்தீரே!
வான் மகனார் இறையேசு வாஞ்சையுடன் கரம்கொண்டீர்
தேன் தமிழால் பாவிசைக்க தேரினிலே வலம் வருவாய்

★ ★ ★

ஓசை நீர் கயல் பாடும் ஓங்கு புகழ் பாஷையூரில்
ஆசை கொள் அந்தோனி அழகுரதம் பவனி பாரீர்

கவிஞர் தேவதாசன்.


## ★ வாழ்த்துகின்றோம் ★

அந்தோனியார் விழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்

SAYONS BAKE HOUSE
சேயோன்ஸ் பேக் ஹவுஸ்
பாஷையூர், யாழ்ப்பாணம்.

---

★ அழகிய கலர் படங்களுக்கு ★
றஜீவ் ஸ்ருடியோ
44, சென். அன்ரனீஸ் வீதி, பாஷையூர்.

---

★ சுவையானதும் தரமானதுமான உணவு வகைகளுக்கு
புஹாரி ஹோட்டல்
சென். அன்ரனீஸ் வீதி, பாஷையூர்.

---

★ சிறந்த பலசரக்குப் பொருட்களை மலிவாகப்பெற
ஜீவா ஸ்ரோர்ஸ்
3ஆம் குறுக்குத் தெரு, பாஷையூர்.
● ஜீவா பேக்ஹவுஸ் ●
49, புதுவீதி, கொய்யாத்தோட்டம்

---

★ மீன் பிடி உபகரணங்கள்
★ அழகுசாதனப் பொருட்கள்
★ பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக் கொள்ள
லக்கி ஸ்ரோர்ஸ்
46, சென். செபஸ்தியன் வீதி, பாஷையூர்.

---

★ சிறந்த நல்ல கடலுணவு வகைகளுக்கு ★
சுமதி
கடலுணவு கொள்வனவு நிலையம்
2, நவீன சந்தை, பீச்ரோட், பாஷையூர்.

---

★ நல்ல ரக பலசரக்குப் பொருட்களுக்கு ★
நாதன் ஸ்ரோர்ஸ்
இல. 951, பீச் ரோட், வளன்புரம், பாஷையூர்.

---

நைற் கபே ஸ்தாபனத்தார்
நைற் கபே திடல், பாசெய்யூர்.

---

உங்கள்
★ எரிபொருள் தேவைகளுக்கும் மற்றும்
★ சீமேந்து ★ கோழித்தீன் வகைகளுக்கும்
லக்ஸ் மாலா ஸ்ரோர்ஸ்
கிளை:
48, 3ஆம் குறுக்கு வீதி, பாசெய்யூர்.
பீச் ரோட், கொழும்புத்துறை.

---

## ★ வாழ்த்துகின்றோம் ★

ரதமேறி வலம் வரும் மாதவன்
புகழ்பாடி அருள் நாடி வேண்டுகின்றோம்.

சென். அன்ரனீஸ்
(அங்கிகாரம் பெற்ற ''யோண்சன்'' விற்பனையாளர்கள்)
63, புனித யூதாததேயு வீதி, பாஷையூர்.

---

★ தரமான வீடியோ கசற்றுக்களை வாடகைக்குப் பெற்றுக் கொள்ள
கிப்பொலிற் வீடியோ சென்ரர்
இல. 34/4, 2 ஆம் குறுக்குத்தெரு, டொலன்ஸ் லேன், பாஷையூர்.

---

★ பலசரக்குப் பொருட்கள் மற்றும்
★ இரும்புப் பொருட்கள் பெற்றுக் கொள்ள
வீரசிங்கம் ஸ்ரோர்ஸ்
கிளை: றுபேஸ் ஹாட்வெயர்
இல. 4, கடற்கரை வீதி, பாஷையூர்.

---

★ புதிய பழைய பாடல்கள் தரமான ஒலிப்பதிவுக்கு
R. J. AUDIO CLUB
Quality Recording Sales Centre
55, New Road, Koiyathottam, PASSAIYOOR.

---

★ மீன்பிடி உபகரணங்கள்
★ அழகுசாதனப் பொருட்கள்
★ பாடசாலை உபகரணங்களுக்கு
றஜீவ் ஸ்ரோர்ஸ்
165, பீச் ரோட், பாஷையூர்.

---

★ ஸ்ரீல் கதிரை, பீங்கான், கிளாஸ் வகைகளுக்கும்
★ தண்ணீர் பரல், படங்கு, வாடகைக்கும் பெற
பிரசன்ன
187, பீச் ரோட், பாஷையூர்.

---

★ சிறந்த பாண், ஐசிங், கேக் வகைகளுக்கு
புனித அந்தோனியார் கூட்டுறவு பேக் ஹவுஸ்
பீச் ரோட், பாஷையூர்.

---

★ சிறந்த கடலுணவு வகைகளுக்கு
செல்வம்
கடல் உணவு கொள்வனவு நிலையம்
நவீன சந்தை, பாஷையூர்

---

★ தரமான கடலுணவு பெற்றுக் கொள்ள
பேக்மன்ஸ்
கடல் உணவு கொள்வனவு நிலையம்
187/1 பீச் ரோட், பாஷையூர்.

---

★ தமிழ் ஆங்கில பாடல்களின் சிறந்த பதிவுக்கும்
★ வீடியோ படப்பிடிப்புக்கும்
நியூ அன்ரனீஸ் றெக்கோடிங் பார்
கடற்கரை வீதி, பாஷையூர்.

---

★ சுவையானதும் தரமானதுமான உணவு வகைகளுக்கு
இஸ்மாயில் ஹோட்டல்
கிளை: பரிஸ் ஹோட்டல்
பீச் ரோட், பாஷையூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு-லிபியா

1. Architectural Draughtsman
சம்பளம்: US $ 400
2. மேசன்
சம்பளம்: ரூ. 9500.00

வயது 20 — 40, 2 வருட ஒப்பந்தம். லீவு, இன்சூரன்ஸ் ஓவர்ரைம் லிபியாவின் சட்டங்களுக்கு அமைய இருப்பிடம், மெடிக்கல், உணவு வசதி (Mess Facility.) இலும்.

மிக அவசரமாக ஆட்கள் தேவைப்படுவதினால் தயவு செய்து பாஸ்போட், பாஸ்போட் படம் 4, சான்றிதழ்களுடன் உடனடியாக

18. 06. 89 க்கு முன் வரவும்.

**இந்திராணி ஏஜென்ஸி,**
பருத்தித்துறை வீதி,
(சேவிஸ் ரேசனுக்கு முன்னால்)
நெல்லியடி.
Licence No: 616 [சி 2836]


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**சலோமன் லோறன்ஸ்**

பிறப்பு: 17 - 10 - 1923 இறப்பு: 14 - 05 - 1989

எம்மை விட்டு நீ பிரிந்து முப்பத்தொரு நாட்கள் போனதையா!
எம்முயிர் எம்மை விட்டுப் போகும் வரை
எம் நெஞ்சிலிருந்து உன் நினைவு போகாது!
எம்முள்ளே நீ என்றும் நடமாடும் தெய்வமையா!
எம் கண்ணில் வடியும் நீர் செந்நீர்த் துளிகளையா!
என்று நீ மீளவந்து எம் துயரைத் தீர்ப்பாயோ?
அன்று வரை எமக்கு ஆறாத்துயரமையா!

தங்கள் நினைவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
4ஆம் வட்டாரம்,
மண்டைதீவு: (887)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. ம. பாலசிங்கம்**
(வெற்றிலைக் கடை பாலு)

அன்னையின் மடியில்: 29 — 09 — 1929 ஆண்டவன் அடியில்: 14 — 05 — 1989

அன்பின் அப்பா!
நீங்கள் உலகை விட்டுப் பிரிந்து இன்றுடன் 31 நாட்கள் சென்று விட்டன. ஆனால் நீங்கள் எங்களை விட்டு இன்னும் பிரியவில்லை;

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள்.

குறிப்பு:- இன்று 13-06-89 அந்தியேட்டிக் கிரியைகளில் உறவினர், நண்பர்கள் மற்றும் எல்லோரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்;

[905]

நடமாடும் சுகாதார சேவை;

# வாகனமும் நிதியும் கிடையாததால் திட்டம் மேலும் தாமதம்

யாழ்ப்பாணம் ஜூன் 13

நடமாடும்சுகாதார சேவைகளை நடத்த யாழ்-செஞ்சிலுவை சங்கம் திட்டமிட்டு இருந்த போதும் கொழும்பில் இருந்து வாகனமும், நிதியும் கிடைக்காததால் இத் திட்டம் தடைப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் சுகாதார சேவைகளை நடத்த 60 நடமாடும் சுகாதார நிலையங்களை அமைக்க யாழ்-செஞ்சிலுவைச் சங்கம் திட்டமிட்டு இருந்தது.

அச் சேவைக்கான வாகனம் கொழும்புக்கு வந்த போதும் இங்கு இதுவரை கொண்டு வரப்படவில்லை.

அத்துடன் கொழும்பு செஞ்சிலுவைச் சங்கத்தில் ஏற்பட்ட சிக்கலால் இத் திட்டத்துக்கான நிதியும் வழங்கப்படவில்லை.

இதனால் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (இ - 3)

# தமிழ்க் கிறிஸ்தவர்களின் இசை மேலைநாட்டு இசை என்பது தவறு

### கலாமன்றச் செயலாளர் உரை

குருநகர். ஜூன் 13

''கிறிஸ்தவ மக்களிடையே தவறான எண்ணம் ஒன்று இருந்து வந்தது: மேற்கத்தைய இசையே அவர்களின் இசை என்று நினைத்திருந்தார்கள். அது தவறு. தமிழர்களான கிறிஸ்தவர்களின் இசை தமிழ் இசை தான் என்பதை எமது நடன - நல்லிசைக் கல்லூரியே இப்பகுதிகளுக்கு எடுத்துச் சொல்லியுள்ளது.''

குருநகர் நடன நல்லிசைக் கலாமன்றத்தின் 15 ஆவது ஆண்டு விழாவில் மன்றச் செயலாளர் திரு. சி. தார்சிசியஸ் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேற்படி மன்றத்தின் தலைவர் அருட்திரு. பி. எம். இம்மானுவேல் அடிகள் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

விழாவில் யாழ் பதில் அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நாதஸ்வரக் கலைமணி பி. எஸ். பிச்சையப்பா குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பித்த விழாவில் திரு. இ. டொறஸ் வரவேற்புரை நிகழ்த்தினர்.

பேராசிரியர் கலாநிதி நீ. ம. சவிரிமுத்து அடிகள் சிறப்புச் சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினர்.

உலக தரிசன யாழ் மாவட்டப் பிரதிநிதி திரு. பொன்குணரத்தினம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினர்.

விழாவில் இசை, நடன நிகழ்ச்சிகளுக்கு இடையில் உரை நிகழ்ச்சிகளை சேர்த்திருந்தது பார்வையாளர்களுக்கு நல்விருந்தாக அமைந்தன.

இறுதியாக ''பாரிஜாதம்'' என்னும் நாட்டிய நாடகம் நடன நல்லிசைக் கல்லூரி மாணவர்களால் அரங்கேற்றப்பட்டது.

போதனாசிரியர்கள் திரு. இசற். தொம்மைக்குட்டி, த. பாக்கியநாதன், செல்விகள் தாரணி செல்வராசா, சிறோமினி இராசநாயகம், திலகவதி பாக்கியநாதன் ஆகியோர் நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கினர்.

கலா மன்ற பொருளாளர் திரு. டேமியன் சூரி நன்றி கூறினர். [க-51]

### வாவியில் கிடந்த சடலம்

மட்டக்களப்பு, ஜூன் 13

காலையில் இரு வாலிபர்களால் விசாரணைக்கு என அழைத்துச் செல்லப்பட்ட இளம் குடும்பஸ்தர் நண்பகல் வாவியில் சடலமாக மிதந்தார்.

இச்சம்பவம் அண்மையில் கிரான்குளத்தில் நடைபெற்றது.

இறந்தவர் எஸ். மனோகசுந்தரம் [25 வயது] என அடையாளம் காணப்பட்டார் [இ- 21]

### பாத்திரங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 13

நல்லூர் இந்து தமிழ் பெண் பாடசாலையின் அபிவிருத்திச் சபை இப்பாடசாலையின்மாணவர்களுக்கு இலவச மதிய போசனம் வழங்க உதவுவதற்கு ரூபா 1, 250/- பெறுமதியான பாத்திரங்களை அன்பளிப்புச் செய்துள்ளது. (ச)

### நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். பெரியபுலம் மகா வித்தியாலய அதிபராக திரு: க. கனகலிங்கம் ஜூன் முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.



பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பட்டதாரி ஆவர். இவர் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1982 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்று வந்த இவர் கோண்டாவில் இராமகிருஷ்ண ம. வித்தியாலயம், யாழ். இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

### முல்லைத்தீவில் கடும்வரட்சி

முல்லைத்தீவு, ஜூன் 13

முல்லைத்தீவில் நிலவும் கடும் வரட்சி காரணமாக கிணறுகளில் நீர் வற்றிக் கொண்டு போவதுடன் குளங்களும் வற்றிவிட்டன.

கால் நடைகள் நீரின்றி அலைகின்றன.

சென்ற பல மாதங்களாக இங்கு மழை பெய்யவில்லை. [ச - 92]

### விவரம் சேகரிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 13

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாடசாலை அதிபர்களின் மாதிரிகையொப்பம் மாதிரிறபர் முத்திரை ஆகியவற்றை பொலீஸ் அத்தியட்சகர் கோரியுள்ளார். (ச - 21)

### பண்ணிசை வகுப்பு

வட்டுக்கோட்டை ஜூன் 13

வட்டுக்கோட்டை இந்து இளைஞர் கலாசார மன்றத்தின் பரமானந்தசிவம் ஞாபகார்த்த நூல் நிலைய மண்டபத்தில் நல்லை ஆதீனத்தைச் சேர்ந்த தேவார இசைமணி திரு. சி. தில்லைமணி பண்ணிசை வகுப்பொன்றை ஆரம்பித்து வைத்தார். [ச]


## கிளிநொச்சி மாவட்ட பிரதான நீர்ப்பாசனக் குளங்களின் திருத்தப்பட்ட நீர்வரி இடாப்பு

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இரணைமடு, அக்கராயன், புதுமுறிப்பு, கல்மடு, வன்னேரிக்குளம், கரியாலைநாகபடுவான், கனகாம்பிகைக்குளம் ஆகிய பிரதான நீர்ப்பாசனக்குளங்களின் புதுக்கிய நீர்வரி இடாப்புக்கள், பங்காளரின் பார்வைக்காக அவ்வப் பகுதி கமநலசேவை நிலையங்களிலும், கச்சேரியிலும் வைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பார்வையிட்டு, முறைப்பாடுகள் இருப்பின் யூன்மாதம் 30ஆம் திகதிக்கு முன் எனக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**அன்ரன் அல்பிரட்**
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.
[சி-2698]


# அரியாலை ஐக்கிய விளையாட்டு கழகத்துக்கு ஷப்ரு கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

ஷப்ரு நிதி நிறுவனத்தின் ஆதரவில் அரியாலை சனசமூக நிலையம் நடத்திய பெண்களுக்கான வலைபந்தாட்டப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி ஷப்ரு கிண்ணத்தைத் தட்டிக் கொண்டது.

ஞாயிறன்று அரியாலை சனசமூக நிலையத்திடலில் நடைபெற்ற வைக்கிங்ஸ் (ஏ) விளையாட்டுக் கழகத்துக்கெதிரான இறுதிப் போட்டியில் 31க்கு 23 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் அரியாலை அணி வெற்றியீட்டியது.

அரையிறுதி ஆட்டங்களில் கிரூஸ் கொப்பர்ஸ் அணியுடனை போட்டியில் வைக்கிங்ஸ் (ஏ) அணியும், ஓல்ட்புளூஸ் அணிக்கெதிரான போட்டியில் அரியாலை விளையாட்டுக் கழக அணியும் வெற்றியீட்டியதன் மூலம் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

இப்போட்டிக்கான நடுவர்களாக திருமதி மைக்கல் பிள்ளை, செல்வி ரி. தர்மலிங்கம், செல்வி ந. யசோதா ஆகியோர் கடமையாற்றினர்.

இப்போட்டிகளில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பண்டத்தரிப்புப் பகுதிக் கொத்தணி அதிபரும், பண்டத்தரிப்பு பெண்கள் உயர் பாடசாலை அதிபருமாகிய திருமதி டி. தம்பிராசா பரிசுகளை வழங்கினர்.

போட்டியில் சிறப்பு விருந்தினராக ஷப்ரு - உதயன் சஞ்சீவி நிர்வாக இயக்குநர் திரு. ஈ. சரவணபவன் கலந்து கொண்டார்.

சனியன்று நடைபெற்ற ஆட்டங்களில் பமிலியன் விளையாட்டுக் கழகம் போட்டிக்குச் சமுகமளிக்காததனல் யுத்தார்மல் (பி) அணியும், நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் போட்டிக்குச் சமுகமளிக்காததனல் கிரூஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகமும், நளினிகாந்த் விளையாட்டுக் கழகத்துக்கெதிரான போட்டியில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் ஸ்ரான்லி அணிக்கெதிரான போட்டியில் வைக்கிங்ஸ் (ஏ) விளையாட்டுக் கழகமும், பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கெதிரான போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும், பாரதி விளையாட்டுக் கழகத்துக்கெதிரான போட்டியில் வைக்கிங்ஸ் விளையாட்டுக் கழக (பி) அணியும், யுத்கார்மல் (ஏ) அணிக்கெதிரான போட்டியில் ஓல்ட் புளூஸ் விளையாட்டுக் கழகமும் வெற்றியீட்டியதன்மூலம் கால் இறுதிப் போட்டிகளுக்குத் தெரிவாகின

கால் இறுதிப் போட்டிகளில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய கிரூஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகமும், யுத்கார்மல் (பி) விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய வைக்கிங்ஸ் (ஏ) விளையாட்டுக் கழகமும், கலாமன்றம், பிறைட் டொன்ஸ் ஆகிய விளையாட்டுக் கழகங்கள் போட்டிககுச் சமுகமளிக்காததால் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் வைக்கிங்ஸ் (பி) விளையாட்டுக் கழகத்துக்கெதிரான போட்டியில் ஓல்ட் புளூஸ் விளையாட்டுக் கழகமும் வெற்றியீட்டின.

இப்போட்டிகளுக்கு திருமதி ஆர். மைக்கல்பிள்ளை, செல்வி ரி. தர்மலிங்கம், செல்வி கமலா விஞசித்தம்பி. செல்வி மஞ்சுளா மகாலிங்கம் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். (இ-6)

# மாணவரின் திறமையை அளவிட விளையாட்டுப் போட்டி உதவும்

### கோப்பாய் கொத்தணி அதிபர் பேச்சு

கோப்பாய், ஜூன் 13

''ஒரு மாணவனின் திறமையை அளவிட விளையாட்டுப்போட்டிகள் உதவும். இப் போட்டிகளில் கலந்துகொள்வதன்மூலம் மாணவன் சமுதாயத்தில் சிறந்தவனாக வளர்கின்றான்.''

கோப்பாய் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டிக்குத்தலைமை வகித்து உரையாற்றிய கோப்பாய்க் கொத்தணி அதிபர் திரு. பூ. க. இராசரத்தினம் இவ்வாறு கூறினர்.

மருதனமடக் கோட்டக் கல்வி அதிகாரி திரு. இ. க. குலசேகரம் பேசுகையில், ''கொத்தணி அமைப்பு கல்வி, விளையாட்டு, கலாசார வளர்ச்சி ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கவேண்டியது அவசியம்'' என்று கூறினர்.

போட்டிகளில் சேனதிராசா இல்லம் முதலாம் இடத்தையும் நாவலர் இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றன. (க-72)

# கால்நடை வளர்க்க பெண்களுக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம், ஜூன் 13

போரூட் நிறுவனத்தின் உதவியுடன் காரைநகர் உழைக்கும் மகளிர் சங்கம் காரைநகர், மருதபுரம், ஊரி, குப்பம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஏழைப் பெண்களுக்கு கால்நடை வளர்ப்பதற்கு ரூபா 26,000 வழங்கியுள்து.


அத்துடன் பரவைக் கடலில் தொழிலில் ஈடுபட்டுள்ள விதவைப் பெண்களுக்கு ரூபா 18,000 பெறுமதியான ''களங்கண்டி'' வலைகளை வழங்கியுள்ளது. (ச)

### சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, ஜூன் 13

வறுத்தாறுமூலையில் அண்மையில் அ. அழகேந்திரன் [27 வயது] என்பவர் இனந் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். [இ-21]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**உயர் திரு சி. வே. சிவசுப்பிரமணியம் அவர்கள்**
(உரிமையாளர் ராஜு ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம், சோடாக் கம்பெனி, வல்வெட்டித்துறை)

தோற்றம்: 12 - 07 - 1913 மறைவு: 25 - 05 - 1988

திதி: 13. 06. 1989

எங்களை அன்புடன் ஆதரித்து வந்த எங்கள் அருமை அண்ணலே! எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டாகியும் எங்கள் மனதைவிட்டு நீங்கள் அகலவில்லை. தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
வல்வெட்டித்துறை: (897)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.

**பொருள்:**

புகழோடு பெரிய ஆண்மையும் விரும்புகின்றவர், புகழ்தேடும் வழியிலும் குடிப்பெருமைக்கு ஒவ்வாத செயல்களைச் செய்யமாட்டார்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்; தொலைபேசி 24805, 22072
13 - 06 - 1989 தொ: பெ: இல: 24

# அடிபெயர்க்க நியதியா?

தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள அரசாங்க அலுவலகங்களில் உத்தியோகத்தர், ஊழியர் பற்றாக்குறை என்பது இப்போது சர்வசாதாரணமாகி விட்டது. அதுவே வழமை நிலை, இயல்பு நிலை என்றும் ஆகிவிட்டது. வடக்கு - கிழக்கில் உள்ள அரசாங்க அலுவலகங்கள் எல்லாவற்றிலுமே அனேகமாக இந்தப் பற்றாக்குறை நீண்ட காலமாகவே இருந்து வருகிறது.

மாவட்ட அடிப்படையில் நியமனம், அந்தந்தப் பகுதிப் படித்த வாலிபர்களுக்கு சம்பந்தப்பட்ட பகுதி வெற்றிடங்களை நிரப்பும் போது முன்னுரிமை, வேலை வங்கித் திட்டம், அதனை நீக்கித் திறமை அடிப்படையில் வேலை வாய்ப்பு என்று அரசு கவர்ச்சியான சொற்பதங்களைக் காலத்துக்குக் காலம் பயன்படுத்தி வந்தது.

தமிழ்ப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் ஒவ்வொரு அறிவிப்பின் போதும், வேலை வழங்கும் திட்டங்கள் மாற்றப்படும் போதும், அரசியல் செல்வாக்கு உள்ளவர்களின் ஆதரவாளர்கள், அபிமானிகள் எடுபிடிகள் என்று எல்லோருக்கும் அரசாங்கத் தொழில் வசதி செய்யப்பட்டது.

அதன் விளைவாக அங்குள்ள பல அலுவலகங்களில் தேவைக்கு அதிகமாக, உத்தியோகத்தர், ஊழியர் எண்ணிக்கை உயர்ந்ததும் உண்டு. பலர் உரிய அளவில் பணி எதையும் செய்யாமலே, அலுவலகங்களில் வெட்டிப் பொழுதைப் போக்கிவிட்டு மக்களின் வரிப்பணத்தைச் சம்பளமாக்கிக் கொள்வதும் உண்டு.

ஆனால் தமிழ்ப் பகுதிகளில் உள்ள அரச அலுவலகங்களின் நிலையோ எதிர்மாறு. மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளை ஆற்றுவதற்குப் போதிய ஆளணியினர் இங்கு இல்லை. விகிதாசார முறைப்படி தானும் தமிழ் இளைஞர்களுக்கு கடந்த பல வருடங்களாக வேலை வசதி வழங்கப்படவில்லை என்பதை இது மிக அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது!

அது மட்டுமன்றி தமிழ்ப் பகுதி மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதிலோ, அவர்களுக்கு உரிய வசதிகளைச் செய்ய வேண்டும் என்பதிலோ அரசுக்கு அக்கறை இல்லை என்பதையும் ஊழியர் பற்றாக்குறை எடுத்தியம்புகிறது.

வீடமைப்புத் திணைக்களத்தில் கடன்பெற்றவர்கள், தமது கடன்களைச் செலுத்திய பின்னரும், கடனுக்கு ஈடாக ஒப்படைத்த காணிகளின் உறுதிகளைப் பெற முடியாமல் திண்டாடுகிறார்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள திணைக்கள அலுவலகத்துக்கு பல நாட்கள் படி ஏறினாலும் உறுதிகளைப் பெறமுடியவில்லை.

ஈடாக வைத்த உறுதிகளை, கடன் திரும்பச் செலுத்தப்பட்டதும் வழங்குவதற்குரிய உத்தரவை வழங்கும் அதிகாரமுடைய உதவி ஆணையாளர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் இல்லை. பலர் கடன்களைத் திரும்பச் செலுத்தினால் மட்டுமே, அவர்களின் கோவைகளை ஒரே முறையில் கொழும்புக்கு எடுத்துச் சென்று, ஈட்டை வெட்டி உறுதிகளை ஒப்படைப்பதற்கான உத்தரவை அங்கிருந்து பெற்றுவர வேண்டி உள்ளது! அதுவரை கடனை முழுக்கக் கட்டித் தீர்த்த பின்னரும் உறுதிகளுக்காக மக்கள் காத்திருக்க வேண்டிய அவலம்.

பிள்ளைகளின் திருமணம் போன்ற அவசர தேவைகளுக்குக் காணிகள் தேவைப்படுவதன் நிமித்தமே, வீடமைப்புக் கடன்களைப் பலர் கட்டித் தீர்த்துள்ளனர். ஆனால் உறுதிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் மக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டி உள்ளது. ஈடு வெட்டப்படும் வரை காணியை வேறு எந்தத் தேவைக்கும் பாவிக்க முடியாமல் பல நல்ல சந்தர்ப்பங்களை அவர்கள் இழக்கவும் நேரிடுகிறது.

ஒரு சராசரிப் பொதுமகனுக்கு உள்ள இந்த இக்கட்டான நிலையை அரசும், அதிகாரிகளும் எங்கே உணரப் போகிறார்கள்! அதுவும் தமிழ்ப் பொதுமகனின் கஷ்டங்களை உணர்ந்து நடவடிக்கை எடுக்க யார் முன் வரப் போகிறார்கள்?

அரசியல் அதிகாரத்தைப் பகிர்வது, நிர்வாக அதிகாரங்களைப் பரவலாக்குவது என்று பெரிதாக, பெரிய சொற்றொடர்கள் எல்லாம் பேசப்படுகின்றன. ஆனால் சராசரித் தமிழ்ப் பொதுமகனின் மிக அடிமட்டப் பிரச்சினையை உணரவோ, உணர்ந்து நடவடிக்கை எடுக்கவோ செயலளவில் எதையும் காணோம்!

தன்னைத் தானே ஆண்ட தமிழினம் இப்படியே சிறு வசதி தானும் இல்லாமல் கிடந்து உழல்வது தான் அவர்கள் தலைவிதியா? தமிழர் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் தொடர்ந்து தலைகீழாக்கப்பட்டுக் கொண்டே போனால் முடிவு என்ன? தமிழ்ச் சமூகம் அடிபெயர்க்கப்பட வேண்டும் என்ற நியதி உண்டா? அதனை மாற்ற ஒரு விதி செய்வது எப்போதோ?

## சாந்திக்குச் சாந்தி!

எடுப்பு
சாந்திக்குச் சாந்தி ஒரு நாகசாந்தி அது
சந்ததி பெருக்கவரும் யோகசாந்தி
(சாந்தி)

தொடுப்பு
வாழ்ந்து சிறக்க அருட் கடல் நீந்து - அவள்
வழங்கும் அருளமுதைத் தினம் மாந்து
(சாந்தி)

முடிப்பு
ஆழ்ந்த துயருக்கெல்லாம் ஒரு மருந்து - அது
அன்னை கடைக்கண்ணின் பெரு விருந்து
சூழ்ந்த கடல் நடுவே அருள்சுரந்து தினம்
துதிக்கப் பயன் பெருகும் நீ அருந்து
(சாந்தி)

**நயினைக் கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை,**

[இன்று 13-6-89 நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் 9 ஆம் திருவிழா]

# பெர்லின் சுவரின் வருங்காலம் பற்றி ரஷ்ய-மே.ஜேர்மன் தலைவர்கள் பேச்சு?

## கோர்பச்சேவின் பொன் விஜயத்தின் போது

பொன், ஜூன் 12

சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் இன்று முதல் தடவையாக மேற்கு ஜேர்மனுக்கு விஜயம் செய்தார்.

நான்கு நாள் திரு. கோர்பச்சேவ் பொன்னில் தங்கி இருப்பார்.

கிழக்கு - மேற்கு ஜேர்மனிகளின் இருதரப்பு உறவுகளை சீராக்குவது பற்றி மேற்கு ஜேர்மன் அதிபர் ஹெல்மட் கோலுடன் திரு. கோர்ப்பச்சேவ் பேச்சுகள் நடத்துவார் என்று அறிவிக்கப்படுகிறது.

நடுத்தர ஏவுகணைகளை ஐரோப்பாவில் இருந்து கணிசமான அளவு குறைக்கப்பட வேண்டும் என்று மேற்கு ஜேர்மன் வலியுறுத்தி வருகிறது. இதை அமெரிக்கா ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த நிலையில் சோவியத் அதிபர் கோர்பச்சேவின் விஜயம் மேற்கு நாடுகளில் முக்கியத்துவம் பெறுகிறது.

பெர்லின் சுவர் தொடர்ந்து இருக்க வேண்டுமா? என்பது பற்றியும் சோவியத் மேற்கு ஜேர்மன் தலைவர்கள் விவாதிப்பார்களா? என்பது பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

ஆனால் பெர்லின் சுவரின் எதிர்காலம் பற்றி இருதலைவர்களும் பேசுவதற்கு வாய்ப்பு உண்டு என்று ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன. [எ]

ஆண்டுதோறும்

# தமிழக பழம் நடிகர்களுக்கு எம்.ஜி.ஆர், கலைவாணர் விருதுகள்

ஆண்டுதோறும் தமிழகத்தின் மூன்று பழம்பெரும் நடிகர், நடிகைகள் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

எம். ஜி. ஆர் விருது, கலைவாணர் விருது, ராஜா சாண்டோ விருது ஆகியன இவர்களுக்கு வழங்கப்படும்.

மாநில அரசு விருது வழங்கும் திட்டத்தை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வரப் போவதாக முதலமைச்சர் கருணாநிதி அண்மையில் அறிவித்திருந்தது தெரிந்ததே.

சிறந்த படம், சிறந்த நடிகர், நடிகை ஆகியோர் தெரிவு செய்யப்படுவர்.

1988 ஆம் ஆண்டின் விருதுகளுக்கான படங்கள், நடிகர், நடிகைகளைத் தெரிவு செய்வதற்காக 13 பேர் கொண்ட நடுவர் சபை ஒன்றை நீதியரசர் எஸ். மோகன் தலைமையில் அரசு நியமித்திருக்கின்றது. [எ]

ஜூலை 1 முதல்

# பாக் - இந்திய எல்லைப்புறத்தில் கூட்டு ரோந்து ஆரம்பம்

இந்திய - பாகிஸ்தான் எல்லைப் புறத்தில் கூட்டு ரோந்து வருகிற ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பமாக உள்ளது.

ஆனால் கூட்டு ரோந்தை நடத்துவதற்குப் பொறுப்பாக கூட்டுத் தலைமைப் பீடம் ஒன்றை அமைக்கும் யோசனையை பாகிஸ்தான் ஏற்க மறுத்துவிட்டது.

இரண்டு நாடுகளின் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகளின் மாநாடு ஒன்றில் கூட்டு ரோந்து யோசனை ஒப்புக்கொள்ளப்பட்டது. (எ)

# எல்-சல்வடோர் அமைச்சர் சுட்டுக் கொல்லப்பட்டார்

எல்: சல்வடோரின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் நேற்று துப்பாக்கி மனிதர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த மாதம் ஆட்சியைத் தேர்தல் மூலம் பிடித்த ஜனாதிபதி கிறிஸ்டியானியின் அமைச்சரவையின் முக்கிய உறுப்பினராக திரு ரொட்ரிக்கஸ் நியமிக்கப் பட்டிருந்தார்.

இடது சாரிக் கெரில்லாக்களே இவரைச் சுட்டுக் கொன்றனர் என்று அரசு அறிவித்தது. [எ]

# மே. ஜேர்மனியில் கோர்பச் சேவுக்கு முதலிடம்

மேற்கு ஜேர்மனியில் சோவியத்தலைவர் கோர்ப்பச்சேவுக்கு அதிக செல்வாக்கு இருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது இடமே மேற்கு ஜேர்மன் தலைவர் ஹெல்மட் கோலுக்கு கிடைத்தது. [எ]

# சவூதி அரேபியா வாங்கும் பிரெஞ்சு ஏவுகணைகள்

பாரிஸ் ஜூன் 12

பிரான்ஸில் இருந்து சவூதி அரேபியா சாம் ஏவுகணைகளை வாங்கும் உடன்படிக்கை ஒன்றை நேற்றுச் செய்தது.

சவூதி பாதுகாப்பு அமைச்சர் இளவரசர் சுல்தான் பின் அப்துல் அஸீஸ் இது சம்பந்தமான பேச்சுக்களை பாரிஸில் அண்மையில் நடத்தியிருந்தார்.

கடந்த 3 ஆண்டுகளாக இப்பேச்சுக்கள் நடந்தன. (எ)

# தாவர - மிருக இனங்கள் அழியும் ஆபத்து நிலை

## ஐ- நா-நிறுவனம் எச்சரிக்கை

நைரோபி ஜூன் 12

தாவரங்கள் மிருகங்கள் ஆகியவற்றில் சுமார் 10 லட்சம் இனங்கள் உலகில் இருந்து அழிந்து போய்விடும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக ஐ. நா சுற்றுபுறச் சூழல் நிறுவனம் அறிவித்திருக்கிறது.

தாவரம், மிருகம் ஆகியன வளர்வதற்குரிய சூழலை மனிதன் அழித்துவருவதே இதற்குக் காரணமாகும் என்றும் அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

பூமியின் தாவர- உயிரியல் வளங்களைப்பாதுகாக்கும் சர்வதேச உடன்படிக்கைஒன்றைத் தயாரிப்பது குறித்து ஐநா சுற்றுப் புறச் சூழல் நிறுவனத்தின் சட்டநிபுணர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

பயனுள்ள தாவரங்கள் மற்றும் மிருகங்களினால் மனிதன் என்ன நன்மையையடையலாம் என்பதைக்கண்டுபிடிக்கும்முன்னரே அவை பூமியில் இருந்து அழிந்துபோய்விடும்அபாயமும் ஏற்பட்டிருப்பதாக இந்த நிறுவனம் எச்சரித்திருக்கிறது. (எ)

# பி. பி. சி. குழு நாடு கடத்தல்

லண்டன், ஜூன் 12

பி. பி. சி. செய்தியாளர் குழு ஒன்று சீன அரசினால் நாடு கடத்தப்பட்டது.

அதற்கு முன்னர் குழுவில் இருந்த 3 உறுப்பினர்களும் சீனப் பொலீஸாரால் தாக்கப்பட்டனர்; பின்னர் விசாரணைக்கு உட்ப த்தப்பட்டனர்.

எரிந்த கவச வாகனம் ஒன்றின் அருகில் சீனப் பொது மக்கள் சிலரை பி. பி. சி. குழு விடியோ படம் பிடித்துக் கொண்டிருந்த போது குழுவினர் கைதுசெய்யப்பட்டனர். [எ]

# ஒருவார கால ஊரடங்கு நீக்கம்

ஜெருசலம், ஜூன் 12

ஆக்கிரமிக்கப்பட்ட காஸா அரபுப் பிரதேசத்தில் கடந்த ஒரு வார காலமாக விதிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுக்காலை இஸ்ரவேலிய இராணுவத்தால் நீக்கப்பட்டது.

சுமார் 6½ லட்சம் பலஸ்தீனியர்கள் தொழிலுக்குப் போகமுடியாமல் இந்த ஒரு வாரகாலமும் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்தனர்.

கடந்த மாதம் மட்டும் 500 பலஸ்தீனியர்கள் வரை இஸ்ரவேல் ராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் காயம் அடைந்தனர்.

பலஸ்தீனியர் மீதான அடக்குமுறை தீவிரமாகி வருவது குறித்து ஐ. நா. கவலை தெரிவித்துள்ளது. (எ)

# யாழ் உள்ளூராட்சி திணைக்கள அபிவிருத்திக்கு ரூபா 20 லட்சம்

## திரும்பவிடாது பயன்படுத்த வேண்டும் என்கிறார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ் மாவட்ட உள்ளூராட்சி திணைக்கள அபிவிருத்தி வேலைகளுக்கு 20 லட்சம் ரூபா இவ்வருடம் ஒதுக்கீடு செய்யப்பட இருக்கிறது. இந்த ஒதுக்கீட்டைத் திரும்பவிடாமல் ஒரு செயல்திட்டம் மூலம் பயன்படுத்தவேண்டும்.

இப்படிக் கூறினார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.எஸ் டிவகலாலா.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் ஞாயிறு காலை இடம்பெற்ற யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தின் வருடாந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

திரு. கோ. தியாகராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கடந்தகாலங்களில், யாழ்ப்பாண மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட 40 லட்சம் ரூபா திரும்பிச் சென்றது.

ஆரம்பிக்கப்பட்ட நீர் விநியோகத்திட்டம் உட்படப் பல திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டன.

இவ்வருடம் கிடைக்கும் 20 லட்சம் ரூபாவை செயல்திட்ட அடிப்படையில் அபிவிருத்திக்குப் பயன்படுத்தவேண்டும்.

இதற்கான செயல் திட்டம் ஒன்றுதயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேற சனசமூக நிலையங்களும் உதவ வேண்டும். இதுபற்றி யாழ் மாவட்டத்திலுள்ள சகல சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளையும் எதிர்வரும் 25ஆம் திகதி கூட்டி ஆராயவிருக்கிறேன்.

இவ்வருட ஒதுக்கீட்டில்இருந்து இடைநிறுத்தப்பட்ட வேலைகளைத் தொடரவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் ஒழுங்காக இயங்காத சனசமூக நிலையங்கள் கலைக்கப்படும். அவற்றின் பதிவுகள் ரத்துச் செய்யப்படும்.

இப்படி அவர் கூறினார். (இ-3)

## கோடி அற்புத--

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களால் துதிக்கப்படுமென்பது குன்றிலிட்ட தீபம்போன்றதாகும்.

எனவே, புனிதர் வழியாக வழங்கி வரும் இம் மகத்தான ஆசியை விட நாம் மென்மேலும் அவருடைய அருளைப் பெறுவதற்குநம்மைப்பக்குவப்படுத்த வேண்டுமென்ற வேண்டுதல் மாத்திரமே நாம் அளிக்கக்கூடிய ஆசியாகும்.

### பக்திச் சபைகளும் இதர குழுக்களும்

எமது பங்கின் பக்திச் சபைகள் அனைத்தும் சேர்ந்து சபைகளுக்குச் சபைகள் ஒத்துழைப்புக் கொடுத்து எமது கிராமத்தை நல்வழிப்படுத்த உழைக்கின்றன. இச்சபைகள் பங்குத் தந்தையை ஆலோசகராகக் கொண்டு செயற்படுகின்றன.

அவ்வகையில் புனித வின்சென்ற் டி போல் சபை, மாதா கூட்டம், மரியாயின் சேனை, சின்னத்திரேசம்மாள் கூட்டம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம் இவர்கள் பாலத்துவ சபையை அமைத்து சிறுவர்களை நல்வழிப்படுத்துகிறார்கள்: மறைகாப்பு குழுவினர் தமது பணியை விழிப்புடன் செயற்படுத்துகின்றனர்.

ஆலய நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக 1974இல் கோவிற்சபை ஸ்தாபிக்கப்பட்டது. நாளாந்த திருவழிபாட்டில் பாடகர் குழாம் சிறந்த பணியாற்றி வருகிறது.

இவற்றிற்கெல்லாம் [illegible] வழியாக எம் பங்குத் தந்தையின் சிறப்பான [illegible]களே காரணமெனலாம்;

# 2 ஆயிரம் முஸ்லிம்களுக்கு ஆசிரிய பதவி

கொழும்பு, ஜூன் 13

25 ஆயிரம் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும்போது 2 ஆயிரம் முஸ்லிம்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும்.

கல்வி அமைச்சர் டபிள்யு ஜே. எம். லொக்குபண்டார முன் கண்ட உறுதி மொழியை [illegible] இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டு [illegible] தெரிவித்தார். [ஒ-எ

# கோட்டக்கல்வி அலுவலகத்தில் விசேஷ கூட்டம்

யாழ்ப்பாணம் ஜூன் 13

யாழ். கோட்டக் கல்வி அலுவலகத்தின் விசேஷ கூட்டம் நாளை 14ஆம் திகதிநடைபெறவிருக்கிறது.

கோட்டக்கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா தலைமையில் நடக்கும் இக் கூட்டத்தில் நல்லூர், யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதி கொத்தணி அதிபர்கள் கலந்து கொள்வார்கள். (இ-3)

# காவலூர் அந்தோனியார் திருநாள்

யாழ்ப்பாணம், ஜூன் 13

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் நவ நாட்கள் 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

மறை உரைகளைத் தினமும் மாலை 5 மணிக்கு அருட்திரு. பங்கிராஸ் யோர்டன் அடிகளார் நடத்தி வருகின்றார்.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு திருநாட்பாடற் பூசை மன்னார் மறை மாவட்ட ஆயர் கலாநிதி திரு தோமஸ் சௌந்திரநாயகம் ஆண்டகையால் நிறைவேற்றப்படும்.

மாலை 5- 00மணிக்கு திருச்சுரூபபவனி இடம் பெறும் [ச]

திருக்கேதீச்சரத்தில்

# சேக்கிழார் தமிழ்க் காவிய கல்லூரி அமைக்க முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 13

திருக்கேதீச்சரத்தில் ஒரு பண்ணிசை, தேவாரப் பாடசாலை, சேக்கிழார் தமிழ் காவியக் கல்லூரி, வேதாகமக்கல்லூரி எதிர்வரும் நவராத்திரி விஜயதசமியன்று ஆரம்பிக்க வேண்டும்'.

திருக்கேதீச்சரத்தில் நடந்த இரண்டுநாள் சேக்கிழார்விழாவின் முடிவில் இப்படியான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற சைவப் பெரியார்கள், கல்விமான்கள் கலந்து கொண்ட இம்மாநாடு சித்தாந்த வித்தகர் திரு. மு. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது.

இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்த திரு. மு. ஞானப்பிரகாசம், சைவபூஷணம் நம. சிவப்பிரகாசம், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. எஸ். தியாகராசா (எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்), மன்னார் அரச அதிபர் ஆகியோர் கொண்டகுழு அமைக்கப்பட்டது. (இ-3)

# உற்சவம்

பச்சிலைப்பள்ளி, ஜூன் 13

எழுதுமட்டுவாள் கிளாலி புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த நவ நாள் உற்சவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகியது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை திருச்சொரூப பவனி இடம்பெறும்.

முகமாலை பங்குத் தந்தை அருட் திரு பிரான்ஸிஸ் அடிகளார்ஆராதனைகளை நடாத்தி வருகின்றார். (க - 117)

# நவாலி குளத்தடி ஞானவைரவர் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 13

நவாலி குளத்தடி ஞானவைரவர் ஆலய கோவில் அலங்கார உற்சவம் நாளை 14 ஆம்திகதிபுதன்கிழமை ஆரம்பமாகி 23 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வரை நடைபெறும்.

23 ஆம் திகதி காலை சங்காபிஷேகமும் மாலை 4 மணிக்கு வருடாந்தப் பொங்கலும் நடைபெறும். [க]

# சைவக்குருமாருக்கு பிரத்தியேக ஆசனம்

யாழ்ப்பாணம், ஜூன், 13

யாழ் மாவட்டத்தில் மினிபஸ்களில் சைவக் குருமாருக்கு பிரத்தியேக ஆசனம் ஒதுக்கித்தர வடபிராந்திய தனியார் பஸ் சேவைகள் சங்கம் தயாராக உள்ளது. சைவக் குருமாரின் உடை பற்றி அறிவிக்க வேண்டும்.

இப்படிக் கூறியுள்ளார் வடபிராந்திய தனியார் பஸ் சேவைகள் சங்கத் தலைவர் திரு. பொன் மதிமுகராசா.

அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். (இ-3)

## தேரேறும் திருக்காட்சி!

மண்ணிற்பல் லுயிர்மகிழும் மோட்சங் கண்டேன்
மதுவண்டு இசைவடிக்கும் மலர்க்கா கண்டேன்
வண்ணநிலா ஒளிமுகத்தில் வீசக் கண்டேன்
வரத்தினிலே மழைமேகம் விளங்கக் கண்டேன்
புண்ணியனுன் அன்புமிழும் பொலிவு கண்டேன்
பாலாறாய் அருள்வெள்ளம் பெருகக் கண்டேன்
கண்ணிரண்டில் மலையருவி கொட்டக் கண்டேன்
காவித்தேர் மீதமர்ந்த கோலம் கண்டேன்.

**பாஷையூர் மு. சிங்கராயர்,**

(இன்று (13 - 6 - 89) பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தின் பத்தாம்நாள் தேர்த்திருவிழா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஷையூரில் கோவில் கொண்ட
புனித அந்தோனி முனியோரே!
தேசை மீண்டும் நாட்டில்மலர
தேரில் வந்து காத்தருளும்!

சென். அன்ரனீஸ்
40, கடற்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

# உதயன்

13 - 06 - 1989 செவ்வாய்க்கிழமை

எங்கள் வாழ்வில் மறைந்து போன
இன்பம், மகிழ்ச்சி, சுபிட்சம், நீதி
திங்கள் போன்று தோன்றி மக்கள்
திருவீதி தேரோடி வந்து அருள்க!

சென். அன்ரனீஸ்
40, கடற்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

## தமிழ் அகதிகள் தாம் விரும்பும் இடங்களில் குடியமர்த்தப்படுவர்

### துணை அமைச்சர் மட்டக்களப்பில் தகவல்

மட்டக்களப்பு, ஜூன் 13

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் உள்ள அகதிகள் பழைய இடங்களில் மீளக் குடியமர மறுத்தால், அம்மாவட்டத்தில் விரும்பிய இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள்.

மேற்கண்டவாறு மட்டக்களப்பிற்கு அண்மையில் வருகை தந்த புனர்வாழ்வு புனரமைப்பு துணை அமைச்சர் திரு வின்சன்ட் பெரேரா தெரிவித்தார்.

செயலகத்தில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

புனர்வாழ்வுப் பணிகள் துரிதப்படுத்தப்படல் வேண்டும். இவ்விடயத்தில் பாகுபாடு இருக்கமாட்டாது.

இந்நாட்டில் வாழும் சகல சமூகங்களும் ஒற்றுமை, ஐக்கியத்துடன் வாழ வேண்டும். எம்மிடையே பிரிவினை இருத்தல் கூடாது. இவ்வாறு அவர் சொன்னார். (ஒ-21)

### அரச அதிபரின் துப்பாக்கி அபகரிப்பு

கொழும்பு, ஜூன் 13

பொலன்னறுவை அரசாங்க அதிபர் திரு யூ. ஜி ஜெயசிங்காவின் வீட்டுக்கு நுழைந்த இனந்தெரியாத நபர்கள் அவரிடம் இருந்து ரிவோல்வர் ஒன்றையும் துப்பாக்கி ஒன்றையும் அபகரித்துச் சென்றனர்.

இச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றது. (ஒ-எ)

### வீடு கட்டும் போட்டி:

## சாவகச்சேரி, பூநகரி வாசிகளுக்கு ரூபா 15 ஆயிரம் பரிசு!

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். மாவட்டத்தில் உள்ளூர் மூலப்பொருட்களை பாவித்துக் கட்டப்பட்ட 316 வீடுகளுக்கு இடையில் நடத்தப்பட்ட மூன்று மட்டங்களிலான போட்டிகளில் சாவகச்சேரியைச் சேர்ந்த மாணிக்கம் நாகராசா முதலிடத்தைப் பெற்று 15 ஆயிரம் ரூபா பரிசு பெற்றார்.

கிராமோதய, பிரதேச, மாவட்டங்களில் நடந்த இப்போட்டியில் மாவட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுகமும், மூன்றும் இடத்தை காரைநகரைச் சேர்ந்த இராசையா உலகநாதனும் பெற்றனர் இவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவிருக்கின்றன.

இதே போல கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற போட்டியில் க. மனோகரன் [பூநகரி] முதலாம் இடத்தைப் பெற்று 15 ஆயிரம் ரூபா பரிசைப் பெற்றுள்ளார்.

இவர்களில் முதலாம் இடம் பெற்ற இருவரும் அகில இலங்கைப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். [ஒ-3]

### மாவட்ட சபைகள் ஒழிப்பு

கொழும்பு, ஜூன் 13

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சட்டத்தை ரத்துச் செய்யும் புதிய சட்ட மூலம் பொது நிர்வாக, மாகாண சபை மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அரசாங்க வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இச் சட்ட மூலத்தின்படி கிராமோதய சபைகள் தொடர்ந்து இயங்கும்.

விரைவில் இச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். (ஒ-ஓ)

## பிரச்சினைகளை விவேகத்துடன் அணுகாவிடில் கஷ்டநிலை வரும்

### அமைச்சர் காமினி சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 13

இலங்கை பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. இவற்றை நாம் விவேகத்துடன் அணுகி விவேகமான முடிவுகளை எடுக்க வேண்டும். இல்லையேல் எதிர்காலத்தை மிகவும் கஷ்டத்துடன் எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்படும்.

பெருந்தோட்டத் தொழில் துறை அமைச்சர் காமினி திஸநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வாரம் கொழும்பு: கொழும்பு மத்தி, ரோட்டரிக் கழகங்கள் கூட்டாக ஒழுங்கு செய்த கருத்தரங்கு ஒன்றில் அமைச்சர் காமினி பேசினார். அப்போது அவர் இக்கருத்தை வெளியிட்டார். (அ-எ)

### தமிழ் மாவட்டங்களுக்கான

## கலால் பரிசோதகர்கள்: இன்று முதல் நேர்முகப் பரீட்சை

தமிழ் மாவட்டங்களுக்கான கலால் பரிசோதகர்கள் தெரிவுக்குரிய நேர்முகப் பரீட்சைகள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் மூன்று நாட்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றன.

கலால் திணைக்களத்தில் தமிழ்ப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காகவே இந்நேர்முகப் பரீட்சை நடைபெற இருக்கிறது.

நேர்முகப் பரீட்சை யாழ்: கடற்கரை வீதியில் உள்ள கலால் பகுதி அலுவலகத்தில் நடைபெறும் என்றும், இதில் 230 பேர் வரையில் கலந்து கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## கால்வாய்க்குள் விழுந்த பஸ்: சென்னையில் 24 பேர் பலி!

சென்னை, ஜூன் 13

தமிழ் நாட்டில் நேற்று இடம்பெற்ற பஸ் விபத்து ஒன்றில் 24 பேர் உயிரிழந்தனர். 21 பேர் காயமடைந்தனர்:

மணலிக்குச் சென்றுகொண்டிருந்த பல்லவன் போக்குவரத்துக்கழகத்துக்குச் சொந்தமான பஸ் ஒன்று வடசென்னைக்கு அருகில் கால்வாய் ஒன்றினுள் விழுந்தது.

18 பேர் நீரில் மூழ்கியதால் மூச்சுத் திணறி மரணமானார்கள். 8 பேர் காயங்களுக்குள்ளாகி உயிரிழந்தனர்.

அந்த இடத்திலேயே 13 பேர் இறந்தனர். உயிரிழந்தவர்களில் 8 பேர் பெண்கள்; 3 பேர் குழந்தைகள். (ஒ-எ]

### கிழக்குப் பல்கலைக்கழகத்தின்

## கலை, வர்த்தக, முகாமைத்துவ பீடத்தை திறக்கக் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூன் 13

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, வர்த்தக, முகாமைத்துவ பீடத்தைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சாம். தம்பிமுத்து உயர்கல்வி அமைச்சரும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவருமான ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத்துக்குக் கடிதம் எழுதி உள்ளார்.

கலை, வர்த்தக, முகாமைத்துவபீடம் மூடப்பட்டிருப்பதால் மாணவர்கள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டி உள்ளார்.

விரிவுரையாளர்கள் சமுகம் அளிக்காததைத் தொடர்ந்தே பிரஸ்தாப பீடம் மூடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-21)

### இந்திய---.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிடுவதை இன்று (13-06-89) முதல் நிறுத்திவிட வேண்டும் என்று அக்கோரிக்கையில் கூறப்பட்டுள்ளது. [ஒ-எ]

## அடக்கப்பட்ட மக்களின் விடிவுக்கு பாடுபட்டார் எம். சி.

### நாடாளுமன்றத்தில் அஞ்சலி

கொழும்பு, ஜூன் 13

அடக்கப்பட்ட மக்களின் விடிவுக்காக திரு. எம். சி. சுப்பிரமணியம் பாடுபட்டார்.

முன்னாள் எம். பி திரு. எம். சி. சுப்பிரமணியத்தின் மறைவுக்கு நாடாளுமன்றத்தில் அனுதாபம் தெரிவித்து அமைச்சர் வின்சன்ட் பெரேரா பிரேரணையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் சொன்னதாவது;

7ஆவது நாடாளுமன்றத்தில் திரு. சுப்பிரமணியம் 07 - 06 - 1970 முதல் 18 - 05 - 1971 வரை உறுப்பினராக இருந்தார்.

தொழிற் சங்கவாதியாக, சமூக சேவையாளராக, அடக்கப்பட்ட மக்களின் விடிவுக்காக திரு. சுப்பிரமணியம் பாடுபட்டது என்றென்றும் நினைவில் இருக்கும்.

கம்யூனிஸ்ட் கட்சியின் ஆயுள் கால உறுப்பினராகவும் அவர் விளங்கினார்.

அவரின் இழப்பினால் துன்புறும் அன்னாரின் குடும்பத்துக்கு சபையின் அனுதாபத்தை தெரிவிக்கும்படி சபாநாயகரைக் கோருகின்றேன்.

திரு கே பி ரத்னயகா (சு க) தமிழில் பேசுகையில் யாழ். விவசாயிகளுக்காக அவர் ஆற்றிய சேவைகளை நாம் மறக்க முடியாது என்றார்.

திரு அ. அமிர்தலிங்கம் (கூட்டணி) பேசுகையில் தீண்டாமை உச்சக்கட்டத்தில் இருந்த சமயம் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காக அவர் பாடுபட்டார் என்றார்.

திரு. அத்தாவுட செனவிரத்தின (ஐ. சோ.மு) பேசுகையில் சோஷலிச சமுதாயம் ஒன்றை உருவாக்குவதில் அரசியல் ரீதியில் அவர் உழைத்தார்'' என்றார்.

திரு. கே. நவரத்தினம் (கூட்டணி) பேசுகையில் இடது சாரி அரசு ஒன்றை நிறுவ திரு. சுப்பிரமணியம் பாடுபட்டார். சிறுபான்மைத் தமிழரின் நலன்களுக்காக அவர் இறுதி வரை உழைத்தார் - என்றார்.

ஜனாப் அஸ்வர் (ஐ.தே.க) பேசுகையில் அவரது அரசியல் கருத்துக்களை நாம் ஏற்றுக் கொள்ளா விட்டாலும் திரு. சுப்பிரமணியம் ஒரு நேர்மையான கனவான். இனசௌஜன்யத்துக்காக அவர் உழைத்தார். அதன்படி நாம் உழைத்திருந்தால் வெளியார் உதவியை நாம் நாடியிருக்க வேண்டியேற்பட்டிருக்காது என்றார்.

திரு. பந்துல குணவர்த்தன (ம. ஐ. மு) ஜனாப் அபூபக்கர் (முஸ்லிம் காங்கிரஸ்), திரு. தர்மசிரி சேனநாயக்கா (சு.க) திரு. ஜி. திவ்வியநாதன் (கூட்டணி) ஆகியோரும் அனுதாபம் தெரிவித்துப் பேசினர். (க-எ)

### மட்டக்களப்பில்----

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் ஆர்ப்பாட்டத்தின்போது கோஷிக்கப்பட்டன.

ஈழத்தேசிய பக்த இயக்கத்தின் ஆதரவில் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது.

ஈ பி.ஆர் எல் எவ், ஈ என். டி.எல் எவ், ரெலோ ஆகியவற்றின் உறுப்பினர்கள் ஊர்வலத்தை வழி நடத்திச் சென்றனர்.

பல்லாயிரக் கணக்கானோர் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். (இ-21)

### அனுராதபுரம்----.

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்தவர்கள் தெரிவித்தனர்.

வேலைநிறுத்தத்திற்கு ஊறு ஏற்படுத்த தாம் இடம் அளிக்கப்போவதில்லை என்றும் —

அதனால் செவ்வாய்க்கிழமை (இன்று) முதல் வடக்கில் இருந்து தனியார் பஸ்களை அனுராதபுரம் ஊடாகச் செல்ல அனுமதிக்கப்போவதில்லை என்றும் வேலைநிறுத்தக்காரர்கள் கூறியிருப்பதாக அறியவருகிறது. (ஒ-10)

### தெற்கு---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேரடி நிர்வாகத்தின் கீழ் இருக்கிறது' எனவே எமது பிரதேசத்தில் இருக்கும் நிலைமைகளைப் பொறுத்து பாடசாலைகளை நடத்துவது தொடர்பாக தீர்மானிக்கும் உரிமை மாகாண கல்வி அமைச்சுக்குரிய கடமையாகும். இதில் தலையீடு இருப்பது அனுமதிக்க முடியாததாகும்.

தெற்கில் உள்ள நிலைமைகளுக்காக எமது பிரதேச பாடசாலைகளை மூடுவதை அரசு தவிர்க்க வேண்டுமென வேண்டுகின்றேன்.

இப்படி முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### இந்தியப் படை . . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருத்தமான செயலாகும்.

அவ்வாறு இல்லாத பட்சத்தில் நிலைமை மேலும் மோசமடைந்து ஒப்பந்தத்துக்கு முன்னால் இருந்த சூழ்நிலை உருவாகுவதற்கு வழி வகுக்கும் என்பதையும் திட்டவட்டமாக கூறிவைக்க விரும்புகிறோம்

1987 ஜூலை இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின் முன்னெப்போதும் இல்லாத வகையில் தற்போது எமது பாதுகாப்பு முற்றிலும் கேள்விக்குறியாகியுள்ளது என்பதை இக்கட்டத்தில் வெளிப்படுத்த விரும்புகின்றோம்.

● 17-03-89 அன்று திருமலை கப்பல் துறையில் தம்பலகாமத்தில் இருந்து இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்ட தோழர் குணரட்ணம் - பரமேஸ்வரன் இன்று வரை வீடு திரும்பவில்லை.

● 10-05-89 அன்று மட்டக்களப்பு புன்னச்சோலையில் வைத்துக் கடத்தப்பட்ட தோழர் குகதாஸ் (ஆனைக்குட்டி) சடலமாக மீட்கப்பட்டார்.

● 23-05-89 அன்று கப்பல்துறையில் தோழர் கனகராசா ஆதரவாளர் தேவசகாயம் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர்.

● 23-05-89 அன்று மூதூர் 64ஆம் கட்டையில் வைத்துத் தோழர் சேகு முகமட் சகாப்தீன் (கசாலி), தோழர் நடராஜா அமிர்தலிங்கம் (அமிர்தம்) ஆகிய இருவரும் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

● இம்மாதம் 02-06-89 அன்று நைனாமடு இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட தோழர் செல்வரெத்தினம் அல்லது வெள்ளைக்கு நடந்தது என்னவென்று இதுவரை தெரியவில்லை —என்று கூறப்பட்டுள்ளது: (ஒ-10)

## ஜனசக்தித் திட்டம் ஜூலை முதல் அமுல்

கொழும்பு. ஜூன் 13

2500 ரூபா வழங்கும் ஜனசக்தித் திட்டம் ஜூலை மாதம் முதல் அமுலுக்கு வரும். இது தொடர்பான பத்திரம் விநியோக வேலைகள் இம் மாதம் 29ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்யப்படும்.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச கடந்த சனிக்கிழமை மஹியங்கனையில் இரு கிராமங்களைத் திறந்துவைத்துப் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

300 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள 13 லட்சம் பேர் இதனால் நன்மை அடைவார்கள் என்றும் ஜனாதிபதி கூறினார்.

பாடசாலைகளில் மதிய உணவுக்காக 200 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் ஒவ்வொரு மாணவருக்கும் மதிய உணவுக்காக 3 ரூபா வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ)

## கிளிநொச்சி மாவட்டத்தில் 1,000 வீடுகள் அமைக்கப்படும்

புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட இருக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு, வீடமைத்துக் கொடுக்கும் புனர் நிர்மாணத் திட்டத்தின் கீழ் ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட இருக்கின்றன.

இத் திட்டத்தின் கீழ் வீடமைக்கும் வேலைகள் கிளிநொச்சி வீடமைப்பு அதிகார சபையிடம் கிளிநொச்சி அரச அதிபரால் வழங்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## மாணவனின் கொலை குறித்து அரசு விசாரணை

தெல்தெனியா, கரலியட்ட பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஒரு மாணவன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக அரசு உயர்மட்ட விசாரணை ஒன்றை ஆரம்பித்திருக்கிறது.

தெல்தெனியாப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட பல பொலீஸார் பேராதனைப் பொலீஸுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்

### தெற்கில் இந்திய--.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போக்கினால் தென்னிலங்கை நிலைமை எப்படியாகும் என்பதை அரசியல் அவதானிகள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வன்செயல்கள் வெடிக்கலாமா என்ற ஊக நிலையும் தோன்றியுள்ளது.

இந்தப் பின்னணியில், புதுடில்லியில், இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரி பின்வருமாறு தெரிவித்தார்.

இலங்கையில் இந்திய சமூகத்தவருக்கு எதிராக ஜே. வி. பி. விடுத்திருக்கும் மிரட்டல்களை அடுத்து இலங்கையின் நிலைமையை இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

வெளிநாட்டவருக்கும், வெளிநாட்டுத்துறை ராஜீய அதிகாரிகளுக்கும் போதிய பாதுகாப்பை அளிப்பது அந்த நாட்டு அரசின் பொறுப்பாகும்.

இது விஷயமாக புதுடில்லி, கொழும்புடன் தொடர்பு கொண்டிருக்கிறது.

**அமைதிப்படை**

இலங்கையில் இருந்து அமைதிப்படையை படிப்படியாக விலக்கிக்கொள்ள இந்தியா கடமைப்பட்டிருக்கிறது.

அமைதிப்படை விலக்கத்திற்கான கால அட்டவணை பற்றி பரஸ்பரம் கலந்தாலோசித்துத்தான் தீர்மானிக்க முடியும்; ஒரு தரப்பாகத் தீர்மானிக்கக் கூடாது - என்றார். (அ-எ)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி சிவலோகசுந்தரம்

(ஓய்வுபெற்ற உதவி தபால் அத்தியட்சகர்
காப்புறுதிக் கூட்டுத்தாபன புலனாய்வாளர்)

மானிப்பாயைச் சேர்ந்த காலம்சென்ற பதிவாளர் சின்னத்தம்பி – திருமதி சின்னத்தம்பி அவர்களின் மகன் சிவலோகசுந்தரம் காலமானார்.

இவர் கமலாதேவியின் அன்புக் கணவரும், கமலானந்தன் (உரிமையாளர், சிறீஷரி ஏஜென்சீஸ் வவுனியா), பிரபாலினி (பிரான்ஸ்), தர்சினி, சிவானந்தன், நிரஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், குமார் (பிரான்ஸ்), ஜெனி ஆகியோரின் அன்பு மாமனும், டினேஷ், பிரகாஷ் ஆகியோரின் பேரனும், காலம் சென்ற சிவபாக்கியம் தியாகராஜா, நவலட்சுமி நடராசா, காலஞ்சென்ற ராஜேந்திரம், யோகேஸ்வரி நமசிவாயம், தம்பிராசா, பத்மநாதன் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று 13-06-1989 பிற்பகல் 2-00 மணிக்கு பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
'நில் கந்தா'
மானிப்பாய்
சி. கமலானந்தன்
[920]

### திருமதி றேசலின் அந்தோனிப்பிள்ளை

திருமதி றேசலின் அந்தோனிப்பிள்ளை காலமானார். அன்னார் அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற சிங்கராசா அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், ஞானப்பிரகாசத்தினதும் காலஞ்சென்ற நேசரத்தினத்தினதும் சிரேஷ்ட புத்திரியும், செல்வராசா, ஜோசப் (Post Master C. M. E), ஜெயம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், புனிதம், கில்வின் (Electronic's Engineer, U. K), பெனிட்டா [France] மெற்றீனா (Canada), சுசி (Switzaland), டொரெக்ஸ், மதி, யூட் (Canada) ரெமி (Canada) ரொசிஸ்டன் (St.Patricks College Jaffna) ஆகியோரின் அன்புத்தாயாரும், குணரெத்தினம் (Managing Director of G. P. N. Construction Co, Ltd), மனோகரன் [France), மரியநாயகம் [Canada], விஜயரட்ணம் (Switzaland) ஆகியோரின் அருமை மாமியாரும், நன்சி, நர்கிஷ், சயிலஜா, சஞ்சுதா, அன்ரனி, அனூரியன் ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
''றேஸ் மஹால்'',
அச்சுவேலி.
திரு. S.J. குணரெத்தினம்.
[11229]

### நடராசா வரதராஜ்

நடராசா வரதராஜ் 02-06-1989 இல் லண்டனில் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு திருமதி. கா. ச. நடராசா [J.P. Ex-M.M.C.] ஆகியோரின் அன்பு மகனும், தர்மபூபதியின் அன்புக்கணவரும், தாராசத்தையின் அருமைத் தந்தையும், மனோகரன், ஜானகி, தேவகி, மகேந்திரன் (மித்திரன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு. திருமதி பொன்னையா ஆகியோரின் அன்பு மருமகனும், இராசா இரகுநாதன், Bobby தனராசா, பத்மநாதன், இராஜேஸ்வரன், ஈஸ்வரன், பத்மாவதி, சற்குணம், பத்மலோசனி ஆகியோரின் அன்பு மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 12-06-89 திங்கட்கிழமை West London Crematorium த்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-
தேவகி தனராசா
39, Clydesdale Avenue,
Stanmore.
Middle Sex,
England.
[11245]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 393/2 இல் உள்ள அச்சகத்தில் 13—06—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org